# ஐக்கிய அரசு

மலர் - 1 இதழ் - 10

ஒக்டோபர் - 1924.

JL
V1m N34IK
N34.1.10
148733

பாங்கின் நிர்வாக சபை அமைப்பில் மாற்றம் ஏற்படவேண்டுமென்பது வெகு நாளாக நடந்துவரும் பிரயத்தனமாகும். அதற்கென கூட்டப்பட்ட மகாஜன சபைக்கூட்டங்கள் நான்கு முறை கூடி கலைந்தது. பிரதம சங்கங்களின் பிரதிநிதிகள் சங்கச்செலவில் வந்து திரும்பினர். பாங்கினுக்கு ஏற்பட்ட செலவோ ஏராளம். எனினும், நிர்வாக சபை அமைப்பில் மாற்றம் ஏற்பட்டபாடில்லை. 142 கூடிய மகாஜன சபைக்கூட்டம் நிர்வாக சபை அமைப்பில் மாறுதல் ஏற்படுத்தும் பொருட்டே கூட்டப்பட்டதெனலாம். இதனை யாவரும் அறிந்ததே. எனவே, நிர்வாக சபை மாற்றம் சம்பந்தமான தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்வதே உசிதம். ஆனால் அதற்கு பதிலாக பெடரேஷனை முடிவு கட்டவேண்டுமென்ற தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென திரு. எல். என். கோபால்சாமி அய்யர் வற்புறுத்தியுள்ளார். மகாஜன சபைக்கூட்டம் கூட்டப்பட்டதின் முக்கியமான நோக்கம் பாங்கின் நிர்வாகசபை அமைப்பில் மாறுதல் ஏற்படுத்துவதற்காக என இருக்கும்போது பெடரேஷனை முடிவு கட்டுவது குறித்து முதலில் விவாதத்தை எழுப்ப முற்பட்டது ஏற்கப்பட்டிருக்குமாகில் அன்றையதினம் உண்மையில் புதிய நிர்வாகசபை தேர்தல் நடைபெற்றிருக்காதென்போம். ஏனெனில் பெடரேஷனை முடிவு கட்டுவது குறித்த தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பின் அது சம்பந்தமாக நடைபெறக்கூடிய விவாதமே அன்றைய பொழுது போக்கிற்குப் போதியதாகும். இதனை உத்தேசித்தே அத்தீர்மானத்தை முதன்மையானதாகக்கொண்டுவரப்படவேண்டுமென வற்புறுத்தப்பட்டாலும் மகாஜன சபையார் அதனைப் புறக்கணித்ததே தீர்மானத்தைக் கொண்டு வந்தவருக்கு நற்பாடமாகும். நிற்க, பாங்கின் நிர்வாகசபை அமைப்பு குறித்து ரிஜிஸ்திரார் கனம். டி. ஆஸ்டின் அவர்கள் ஆசி கூறி இருந்ததே அத்தீர்மானம் எவ்வளவு தூரம் நேர்மையானதென்பதைக் காட்டுகிறது. அத்தகைய தீர்மானத்தை நியாயாபிமானிகள் எவரும் ஏற்காதிருக்க முடியாது. அத்தீர்மானத்தை திரு. டி. எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை பிரேரணை செய்து, திரு. என். எஸ். கோவிந்தசாமி ஆதரித்ததும், திருத்தத்தின் மேல் திருத்தங்கள் வந்து விழுந்தன. இத்திருத்தங்கள் யாவற்றினும் திரு. ஆர். சீனுவாச அய்யர் திருத்தம் ஊன்றி கவனிக்கத்தக்கது. திரு. ஆர். சீனுவாச அய்யரின் திருத்தம் அவரது சொந்த அபிப்ராயம் என்பதாகக் கூறப்பட்டாலும், அதனை அவரது சொந்த அபிப்ராயமென்பதைவிட, தனித்த பங்காளரில் முக்கியஸ்தர்கள் பலரின் முடிவான அபிப்ராயம் என்றே சொல்லலாம். எனவே, இத்தீர்மானம் கண்ணியமாகப் பாவிக்கப்படத்தக்கதாக இருந்ததுடன் மகாஜன சபையாரின் மதிப்பிற்குரியதாகவுமிருந்தது. பாங்கின் நிர்வாக சபையில் தனித்த பங்காளருக்கு 7 ஸ்தானமும், பிரதம சங்கத்தாருக்கு 14 ஸ்தானமுமாக இருப்பதை திரு. ஆர். சீனுவாச அய்யர் ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் அவரது திருத்தத்தின் நோக்கம் தனித்த பங்காளர்களின் பிரதிநிதிகள் தனித்த பங்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும், பிரதம சங்கத்தாரின் பிரதிநிதிகள், பிரதம சங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என தனித்தேர்தல் முறையைப் புகுத்துவதாகும். சட்ட சபையிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் கூட்டுத்தேர்தல் முறையே இருக்கவேண்டுமென்பது தேசிய வாதிகள் கோரிக்கை. கூட்டுத்தேர்தல் முறையை ஆதரிக்காதவர்களெல்லாம் பிற்போக்காளர்கள், வகுப்பு வாதிகள், சுயநலக்காரர்கள், நாட்டை அந்நியருக்குக் காட்டிக் கொடுப்பவர்கள், தேசத்துரோகிகள் என்பது தேசிய வாதிகள் தீர்ப்பு. சாதாரணமாக ஒரு ஜில்லா ஜட்ஜ் அல்லது ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்புக்காவது உயர் நீதிமன்றத்தில் அப்பீலுண்டு. ஆனால் தேசிய வாதிகளின் தீர்ப்புக்கு எந்தக் கோர்ட்டிலும் அப்பீல் கிடையாது. திரு. ஆர். சீனுவாச அய்யர் ஒரு தேசியவாதி என்பதையும், பொது வாழ்வில் அவர் முதன்மையான ஸ்தானம் வகித்து வருகிறார் என்பதையும் சகலரும் அறிந்ததே. இங்ஙனமிருக்க அவர் தனது சொந்தப் பொறுப்பிலோ அல்லது தனது நண்பர்களின் விருப்பத்தை ஒட்டியோ தனித்தேர்தல் முறையை ஆதரித்ததானது தேசிய வாதிகள் அளித்துள்ள தீர்ப்புக்கு விரோதமாக இருப்பதுடன் வேலியே பயிரை அழிக்க முற்பட்டது போலவும் உள்ளது. எனவே, திரு. எம். வி. துரைசாமி

உடையார் அவர்கள் திரு. அய்யருக்குக் கொடுத்த சூடு குறித்து நாம் வருந்துவதற்கில்லை. நிற்க, திருத்தப் பிரேரணைகள் ஓட்டுக்கு விடப்படுமுன் திரு. சின்னசாமி அய்யர் அவர்கள் சபையார் உத்திரவுடன் தனது பிரேரணையை வாபீஸ் வாங்கிக்கொண்டதற்கு நாம் மகிழ்ச்சி அடைவதுடன் அவர் மகாஜன சபையின் போக்கை அறிந்து கண்ணியமாக நடந்து கொண்டதற்குப் பாராட்டுகிறோம். இது இவ்வாறாக, திரு. வி. பி. கணேச அய்யரால் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணை குறும்புத் தனமானதெனலாம். அவரது தீர்மானம் திரு. எல். என். கோபால்சாமி அய்யரது ஆசீர்வாதத்தைப் பெற்றதிலிருந்தே அதனை குறும்புத்தனமானதென அச்சமின்றி கூறுவோம். திரு. எல்.என். கோபால்சாமி அய்யர் தான் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென விரும்புவாராகில் அதற்கு அவர் செய்யக்கூடிய வழி அவர் தான் விரும்பும் தீர்மானத்தை வேறு யாரையாவது கொண்டுவரச்செய்து, அத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசுவதேயாகும். அவர் எதிர்த்துப் பேசுவாராகில் அவர் விரும்பும் தீர்மானம் நிறைவேறும். அதுபோல், ஓர் தீர்மானம் நிறைவேறக்கூடாதென அவர் விரும்பும் பட்சத்தில் அத்தீர்மானத்தை அவர் ஆதரித்துப் பேசுவாராகில் அவர் நினைக்கும் காரியத்தில் வெற்றி பெறுவார். இம்முறையில் மகாஜன சபையாரின் நன்மதிப்பையும், நற்சாட்சிப் பத்திரத்தையும் பெற்றுள்ள திரு. எல்.என். கோபால்சாமி அய்யர் அவர்களால் ஆதரிக்கப்பட்ட தீர்மானத்தை குறும்புத்தனமானதென்று கொள்வதோ அல்லது கூறுவதோ குற்றமாகுமென எவரும் சொல்ல முடியாது. திரு. ஆர். சீனுவாச அய்யராலும், திரு. வி. பி. கணேச அய்யராலும் கொண்டு வரப்பட்ட திருத்தப்பிரேரணைகள் ஓட்டுக்கு விடப்பட்டு தோல்வியடைந்த விதத்தைப் பார்த்த எவரும் திரு. டி. எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களின் பூர்வாங்க தீர்மானம் நிறைவேறியதாகக்கொள்ளலாம். இந்நிலையில் தலைவர் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் எழுந்து "தனது சொந்த அபிப்ராயம்" என்பதாகக் கூறிய வார்த்தைகள் பிரதிநிதிகளிடையே பெரும் விவாதத்தை எழுப்பிவிட்டது. தலைவரின் அபிப்ராயங்குறித்து பலர் பலவாறு கூறலாயினர். தலைவர் பேசியது தவறு என்றோர் சிலர். தலைவர் திரு. பிள்ளையின் வாழ்வும் தாழ்வும் பிரதம சங்கத்தாரின் வெற்றியையும் தோல்வியையும் பொறுத்ததாக இருப்பினும் பிரதம சங்கத்தாருக்குப் பாதகமாகப் பேசியது பெரும் அபத்தம் என்றோர் சிலர். "உதைக்கும் காலுக்கு முத்தமிடுவோரும், அணைக்கும் கையை உதறித்தள்ளுவோரும் சிலர் உலகிலுண்டு. அத்தகையோர் இனத்தைச்சேர்ந்தவர் நமது தலைவர்" என்றோர் சிலர். "பிரதம சங்கத்தார் வெற்றி நன்மை அளிக்கத்தக்கதே. ஆனால் அவர்களது வெற்றியால் ஏற்படக்கூடிய நன்மை தற்காலீகமானதாக இருக்க முடியுமேயன்றி நிரந்தரமானதாக இருக்க முடியாது. ஏனெனில், பிரதம சங்கத்தார்களெல்லாம் பிண்டாரிகள். இப்பிண்டாரிகளைக் கட்டி மேய்ப்பதைக் காட்டிலும் தனித்த பங்காளரை அடக்கி ஆள்வது சுலபம். மேலும், பிரதம சங்கத்தாருக்கு சுதந்திர உணர்ச்சி பெருக பெருக, பகுத்தறிவு வளர வளர தனது தலைவர் பதவிக்கே ஆபத்து ஏற்படக்கூடும்" என்ற அச்சமே திரு. பிள்ளை கூட்டுத் தேர்தல் முறைக்கு விரோதமாக இருந்ததற்குக் காரணம் என்றனர் சிலர். "பிரஸ்தாபத் தீர்மானம்நிறைவேறிவிடுமென்பது திரு. பிள்ளை அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அது நிறைவேறவேண்டுமென்பதுதான் அவரது அவாவுமாகும். ஆனால் திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்தோர் பொல்லாப்புக்கு ஆளாக அவர் விரும்பவில்லை. அவர்களுக்கு நல்ல பிள்ளையாக வேண்டுமென்பதே அவரது விருப்பம். அதனால்தான் அவர் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசினார்" என்றோர் சிலர். இவ்வாறு பலர் பலவாறு பேசுவதற்கும், வியாக்கியானம் புரிவதற்கும், தத்துவார்த்தங் கூறுவதற்கும், தலைவர் இடமளித்தமைக்கு நாம் உண்மையில் வருந்துகிறோம்.

இந்நிலையில் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டதும் மகாஜன சபையில் கூடி இருந்த பெரும்பான்மையோர் தீர்மானத்திற்கு ஆதரவளித்ததைக் காண பிரதம சங்கத்தாரின் வெற்றி உறுதியாயிற்று. இவ்வெற்றியை சாதாரணமான வெற்றியாகக் கூற முடியாது. இதுவரையில் பிரதம சங்கத்தார் அடைந்திராத மகத்தான வெற்றி என்றே சொல்ல வேண்டும். இவ்வெற்



றிக்கு மூல புருஷர்களாக இருந்தவர்களை வாழ்த்தவும், இவ்வெற்றிக்கு அனுகூலமாக இருந்தனவற்றையும் குறிப்பிடவும் விரும்புகிறோம். இவ்வெற்றியின் பெருமையில் பெரும் பங்கு கூட்டுறவு ரிஜிஸ்திரார் கனம். ஆஸ்டின் அவர்களுக்கே உண்டு. கனம். ஆஸ்டின் அவர்கள் பாங்கின் உண்மை நிலையை அறிந்து, பிரதம சங்கத்தாரின் கோரிக்கை நியாயமானதென்பதை உணர்ந்து, தயவு தாட்சண்யத்திற்கு இடங்கொடாமல், அச்சமென்பதைஒருசிறிதுமறியாதநெஞ்சுத்துணிவுடன், பிரதம சங்கத்தாருக்கு வக்கீலாகப் போராட முன் வந்ததே பிரதம சங்கத்தார் இலகுவில் வெற்றியடைய முடிந்தது. கனம். ஆஸ்டின் அவர்களது கடிதம் வாசிக்கப்பட்டதும் நகரசபை ரத்து செய்யப்பட்ட பாக்கியம் திருச்சிக்கு ஏற்பட்டதுடன் நில்லாது நகர பாங்குக்கும் ஆபத்து வந்ததோ என எண்ண வேண்டி இருந்தது. இதுபோன்ற காரமான, சாரம் நிறைந்த கடிதத்தை கனம். ஆஸ்டின் அவர்கள் எழுதக் காரணமில்லாமலில்லை. பிரபல கூட்டுறவாளரும், தனித்த பங்காளரும், பாங்கின் ஸ்தாபகரும், முதன்மையானவருமான திரு. தேசபூஷண பிரசன்ன வெங்கடேஸ்வர ராவ் அவர்களும், மற்றும் அவரைப்போன்ற பலரும் பிரதம சங்கத்தாருக்கு பாங்கின் நிர்வாக சபையில் மூன்றில் இரண்டு பங்கு ஸ்தானம் அளிக்க வேண்டியது நியாயமென்பதை திருச்சிக்கு கனம். ஆஸ்டின் அவர்கள் நேரில் விஜயஞ்செய்த காலத்தில் எடுத்துக் கூறியதே அவருக்கு பிரதம சங்கத்தார் மீது அனுதாபம் ஏற்படவும், அவருக்கு உண்டான அனுதாபத்தைக் கடித மூலம் காட்டவும் நேர்ந்தது. நாம் முன்னம் குறிப்பிட்டபடி புதிய டிப்டி ரிஜிஸ்திராரின் வரவு கூட்டுறவாளரிடையே என்றுமில்லாத உணர்ச்சியை உண்டு பண்ணி இருந்தது. சப் டிப்டி ரிஜிஸ்திராரின் நாவன்மை சகலரையும் கவர்ந்தது. பிரதம சங்கத்தார் யாவரும் தாங்கள் வெறும் கைக்காட்டி மரங்கள் அல்ல என்பதையும், ஓட்டுரிமையின் பெருமையை உணர்ந்து விட்டனரென்பதையும் இத்தீர்மானம் வெற்றி அடைந்திலிருந்து நிரூபிக்கப்பட்டுவிட்டது.

தலைவர் திரு. டி. எம். நாராணசாமி பிள்ளை தீர்மானத்தின் ஓர் பாகமாகிய கூட்டுத்தேர்தலை ஆதரிக்காததிலிருந்து பாங்கின் உபதலைவர் திரு. எல். என். பரமசிவம் பிள்ளை எவ்வாறு நடந்து கொள்ளக்கூடுமோ (தீர்மானத்திற்கு சாதகமாக இருப்பாரா? பாதகமாக இருப்பாரா?) என்பது குறித்து பிரதிநிதிகளால் விசேஷ கவனஞ் செலுத்தப்பட்டது. திரு. பிள்ளை அவர்கள் திரு. முத்துக்குமரசாமி பிள்ளை அவர்களின் பூர்வாங்க தீர்மானத்தை ஆதரித்ததின் மூலம் அவர் தான் தலைவரின் நண்பரேயன்றி அவரது நிழல் அல்ல என்பதை மெய்ப்பித்து விட்டார். இங்ஙனமிருக்க அவரைப்பார்த்து திரு. ஆர். சீனுவாச அய்யர் அவர்கள் "தாங்கள் கூடவா எனக்குப் பாதகமாக இருக்கிறீர்கள்" என்றதாகவும், திரு. ஜெயராம அய்யர் அவர்கள் "பிள்ளை அவர்கள் பழைய பிள்ளை அல்ல" என்று கூறியதாகவும் அறிகிறோம். திரு. எல். என். பரமசிவம் பிள்ளை அவர்கள் பிரஸ்தாப தீர்மான விஷயத்தில் தயவுக்கோ, தாட்சண்யத்திற்கோ, கட்டுப்படாது மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடந்து கொண்டதற்கு உண்மையில் நாம் போற்றுகிறோம். அவ்வாறின்றி அவர் திரு. ஆர். சீனுவாச அய்யரின் திருத்தத்தை ஆதரித்திருப்பாராகில் அவரை நாம் "பிள்ளை" என்பதைவிட "பிள்ளையார்" என்றே திண்ணமாகக் கூறுவோம்.

நிற்க, இத்தீர்மானம் குறித்து நாம் விரிவாக எதுவும் கூறுவதற்கில்லை. நிர்வாக சபையானது மகாஜன சபையின் பிரதிபிம்பமேயாகும். எனவே, மகாஜன சபையில் தனித்த பங்காளருக்கும், பிரதம சங்கத்தாருக்கும் உள்ள சங்கியைப் பொருத்து நிர்வாக சபையை முறையே 7 ஸ்தானமாகவும், 14 ஸ்தானமாகவும் கொண்டு அமைப்பதே நியாயமாகும். பாங்கினை ஸ்தாபித்த பெருமை தனித்த பங்காளருக்கு உண்டு என்பது உண்மையே. அதற்கென அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியதும் அவசியமே. ஆனால், சர்ச்சில்—ரோதர்மீர் ஆகியோர் கேட்கக் கூடிய பாதுகாப்பை தனித்த பங்காளர்கள் கேட்டு வந்ததும், அதனை பிரதம சங்கத்தார் மறுத்ததும், மகாஜன சபையார் அளித்த தீர்ப்பும் நியாயமானதே. கூட்டுத் தேர்தல் சிறந்ததென்பது சகலரும் அறிந்ததாக இருந்தும் கூட்டுத் தேர்தல் முறையில் நம்பிக்கையுள்ளோரே அதற்கு விரோதமாக இருந்ததும், அதனால்

நீண்ட வாக்கு வாதம் எழுந்ததும், விசனிக்கத்தக்கதாயினும் மகா சபையார் செய்துள்ள முடிவு போற்றத்தக்கதே.

பாங்கின் நிர்வாக சபை அங்கத்தினர்கள் எதிர்ப்பின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதின் மூலம் புதிய நிர்வாக சபை அங்கத்தினர்கள் மகாஜன சபையின் ஆதரவைப்பெற்றுள்ளார்களெனத் தெரிகிறது. இவர்களது பரஸ்பர ஒத்துழைப்பால் இதுவரையில் இருந்தது போல் சச்சரவின்றி பாங்கின் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுமென எதிர் பார்க்கிறோம். பாங்கின் விதியில் திருத்தஞ்செய்வதென்றால் நான்கில் மூன்று பங்கு பேர் ஆதரவு இருக்க வேண்டுமென்பதை மூன்றில் இரண்டு பங்கு பேர் இருந்தால் போதுமென்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டதும், அத்தீர்மானத்தை சப்டிப்டி ரிஜிஸ்திரார் திரு. நித்தியானந்தம் அவர்கள் தெளிவாக விளக்கியதும், தீர்மானம் எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேறியதும், அத்திருத்தத்தின் அவசியத்தை நன்கு புலப்படுத்துகிறது. சிப்பந்திகளின் சம்பளப் பிடித்தம் சம்பந்தமான தீர்மானத்தை நாம் இதுசமயம் குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. காய்கறிகளுக்கு இயற்கையான மணம் இருப்பதில்லை. அதற்குக் கருவேப்பிலை இன்றியமையாதது. கருவேப்பிலையைத்தாளித்துப்போடுவதால் கறிகாய்களுக்கு வாசனை ஏற்படுகிறது. ஆனால் உண்ணும் நேரத்தில் இலையிலிருந்து முதலில் அப்புறப்படுத்தப்படுவது கருவேப்பிலையேயாகும். நமது பாங்கின் கூட்டத்தில் சிப்பந்திகள் சம்பளப் பிடித்தம் ரத்து செய்வது சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் பொதுவாக மகாஜன சபையாரும், குறிப்பாக பிரதம சங்கத்தாரும் கருவேப்பிலைகளாகத்தான் கருதப்பட்டனர் என்பதற்கு இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விதமும் அதனால் ஏற்பட்ட வாக்குவாதமும் போதிய அத்தாட்சியாகும். பிரதம சங்கத்தார் இனியாவது தங்களை கருவேப்பிலைகளாகப் பிறர் கொள்ள இடந்தராதிருக்குமாறு எச்சரிக்கை செய்கிறோம். மேலும், இத்தீர்மானத்தின் மூலம் ஓர் உண்மை வெளியாயிற்று. அதாவது, நகரசபை, ஜில்லா போர்டு போன்ற ஸ்தல ஸ்தாபனங்களில் சேவை புரியும் சிப்பந்திகள் தேர்தல் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கட்சியாருக்குக் கையாட்களாகவும், கங்காணிகளாகவும், தேர்தல் பிரசாரகர்களாகவும் இருந்து எவ்வாறு வேலை செய்கிறார்களோ, அவ்விதம் வேலை செய்வதின் மூலம் தங்களது செல்வாக்கை பெருக்கவும், வாழ்க்கையை மேம்பாடடையச் செய்யவும் முயற்சிக்கிறார்களோ, அதுபோல் கூட்டுறவு ஸ்தாபனங்களிலுள்ள சிப்பந்திகளும் நடந்து கொள்ளுகிறார்கள் என்பது தெளிவாயிற்று. கட்சிப்பிரதி கட்சி காரணமாக ஸ்தல ஸ்தாபனங்களின் சிப்பந்திகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனரோ அது போலவே கூட்டுறவு ஸ்தாபனங்களின் சிப்பந்திகளும் பாதிக்கப்படுகின்றனர் என்பதும் பகிரங்கமாயிற்று. மேலும், ஸ்தல ஸ்தாபனங்களில் சேவை புரியும் சிப்பந்திகள் அடைந்து வரும் துயரத்தையும், அவர்களது துர்பாக்கியமான நிலைமையையும் விட கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேவை புரிவோர் நிலைமை மிகவும் நெருக்கடியானதாகவே காணப்படுகிறது. எனவே, ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ளவர்களைப்போன்று கூட்டுறவு ஸ்தாபனங்களில் குறும்புத்தனம் செய்யும் சிப்பந்திகளை தண்டிக்கவேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோல் அவர்களது நியாயமான உரிமைகளை ஏற்று முன்னேற்றத்திற்குப் பங்கம் வராமல் பாதுகாப்பு அளிக்கவேண்டியதும் மிக மிக அவசியமென கருதுகிறோம்.

இறுதியாக, மகாஜன சபைக்கூட்ட காலத்தில் திட்டஞ்செய்யப்பட்டுள்ள சிற்றுண்டி குறித்து ஒரு யோசனை கூற விரும்புகிறோம். சிற்றுண்டிக்காக ஏராளமான பணம் செலவு செய்யப்படினும் தனித்த பங்காளரோ அல்லது பிரதம சங்கத்தாரோ உண்மையான பலனடைவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மத்திய பாங்கினைச் சேராத பலர் பலனடைகிறார்கள் என்பதைத் துணிந்து கூறுவோம். கூட்டுறவாளர்களில் சிலர் பலனடைந்திருப்பார்களாகில் அவர்களுக்கு இரு யோக்கியதாம்சம் இருத்தல் வேண்டும். குத்துச்சண்டையில் தேர்ச்சி பெற்றவர்களாகவோ அல்லது அத்தட்டிப் பேசுபவர்களாகவோ இருந்தாலொழிய சிற்றுண்டி அருந்தி இருக்க முடியாது. இச்சிற்றுண்டியில் கலந்து கொண்டோர் [illegible]



பிள்ளை அவர்கள் சத்திரத்தில் ஆண்டிமடம் திரு. சிங்கிதம்பர முதலியார் அவர்களின் மேம்பார்வையில் அருமையாக நடைபெற்ற விருந்தின் பெருமையை உணராதிருக்க முடியாது. இனி எதிர் காலத்தில் சிற்றுண்டிக்கென வீணான பொருள் விரயம் செய்வதைவிட பிரதிநிதிகள் சகலருக்கும் மகாஜன சபைக் கூட்டத்திற்கு முன்னதாக உணவளிக்கத் திட்டஞ் செய்வதே சிலாக்கியமென்போம். இந்த யோசனையை புதிய நிர்வாக சபையார் ஏற்று அமுலுக்குக் கொண்டு வருவார்களென ஆவலுடன் எதிர் பார்க்கிறோம்.

## தாமதம் ஏன்?

திருச்சி ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கு ஸ்தாபிக்கப்பட்டு வெகு நாள் ஆகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சங்கங்கள் 500-க்கு மேல் இருக்கின்றன. பாங்கின் கட்டிட நிதி என்பதாக லாபத்தின் ஓர் பகுதி ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதில் ஒரு லெட்ச ரூபாய்க்கு மேல் இருப்பாக உள்ளது. ஆனால், இன்னும் பாங்கிற்கென தனிக்கட்டிடம் ஏற்பட்டபாடில்லை. பாங்கிற்குக் கட்டிடம் கட்டவேண்டுமென்பதில் அனேகம் பேருக்கு அக்கறை உண்டு. ஆனால், உருப்படியான திட்டம் மாத்திரம் எவராலும் கொண்டு வரப்படவில்லை. பாங்கின் கட்டிடத்தை அமைப்பதற்கு தென்னூரில், ரயில்வே லயனுக்கு அருகாமையில், எலெக்டிரிக் கார்ப்பரேஷன் பவர் ஹவுசுக்குப் பக்கத்தில் ரூ. 11,000க்கு நிலம் வாங்கப்பட்டது. (நிலம் வாங்கிய காலத்தில் கார்ப்பரேஷன் ஸ்தாபிக்கப்படவில்லை.) கட்டிடக் கல்நாட்டு விழாவும் குறிப்பிடப்பட்டது. அதற்காக சென்னை மாகாண கவர்னர் வருவதென்றும் இருந்தது. ஆனால், கல் நாட்டப்படவுமில்லை, கவர்னர் விஜயம் செய்யவுமில்லை, கட்டிடம் பூர்த்தியாகவும் இல்லை. ஆனால், கட்டிடப் பிளான் தயாரிப்பதற்காகவும், ஏனைய வகையிலும் மாத்திரம் சுமார் ரூ. 4000 வரை செலவானதாகத் தெரிகிறது. இம்மாதிரி கட்டிடம் கட்டப்படாமைக்குக் காரணம் வாங்கப்பட்டநிலம் ரயில்வே லயனுக்கு அருகாமையில் இருப்பதாலும், ரயில் வண்டிகள் அடிக்கடி போவதாலும், பக்கத்தில் மின்சார நிலையம் இருப்பதாலும், சதாகாலமும் சப்தமும் அமைதியின்மையும் குடிகொண்டிருக்கிறதென்றும், பாங்கிற்கு இடம் தகுதியற்றதென்றும் கூறப்பட்டது. என்னே! முன் யோசனை இன்மை. நிலத்தைவிற்று விடுவதென்றும், புதிய ஸ்தலமாகப் பார்த்து வாங்கி கட்டிடத்தை அமைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. வாங்கப்பட்ட நிலம் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷனுக்கு கொடுப்பதென சமீபத்தில் முடிவு செய்யப்பட்டது. ஆனால் வாங்கிய விலைக்கு நிலம் விற்பனை செய்யப்படவில்லை. ஆனால் இத்துடன் கட்டிடப்பேச்சு நின்றபாடில்லை. பிஷாப் ஹீபர் கல்லூரிக்குச் சொந்தமான தெப்பக்குளத்திற்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தை ரூ. 70,000க்கு வாங்குவதென்றும், பாங்காரே ரிஜிஸ்திரேஷன் செலவு ஸ்டாம்புச் செலவு ஆகியவற்றினை ஏற்றுக்கொள்வதென்றும், பாங்கின் தலைவர் ஏற்பாடு செய்ததாகவும், அவரது முடிவை கட்டிடக் கமிட்டியார் அங்கீகரித்ததாகவும், ஆனால் மகாஜன சபையார் ஏற்க மறுத்து புறக்கணித்து விட்டதாகவும் தெரிகிறது. அவ்வாறு மகாஜன சபையார் பிஷாப் ஹீபர் கல்லூரிக்குச் சொந்தமான கட்டிடத்தை வாங்க மறுத்ததற்கு காரணம் கட்டிடம் பழமையானதென்பதும், அக்கட்டிடம் ரூ. 70,000 பொருமானமுள்ளதல்லவென்பதும் எழுபதினாயிரம் ரூபாயைக்கொண்டு நவீன முறையில் தேவையான வசதிகளுடன் சிறந்த கட்டிடம் அமைக்கலாமென்பதுமாகும். பிஷாப் ஹீபர் கல்லூரிக்குச் சொந்தமான கட்டிடத்தை வாங்குவதென்ற தீர்மானம் நிறைவேறாது போனது முதல் பாங்கின் கட்டிட சம்பந்தமான பேச்சு ஓய்ந்து விட்டது. தமிழ் நாட்டிலும் அநேகமாக மத்திய பாங்குகள் யாவும் தனக்கென தனித்த கட்டிடங்களை பெற்றுள்ளன. திருச்சி ஜில்லா பாங்கிற்கு இது வரையில் தனித்த கட்டிடம் ஏற்படாதது பெருங்குறையாகும். இக்குறையைப் போக்க வேண்டியது கூட்டுறவாளர் கடமை. நகரின் நடுவில், பரந்த வெளியில், பாங்கின் நிர்வாகிகளுக்கும், பிரதம சங்கத்தாருக்கும் சௌகரியமான முறையில் கட்டிடம் அமைக்கப்படவேண்டும். இதற்காக திட்டம் போடுவதிலோ, பிளான்கள் தயாரிப்பதிலோ இன்னும் பொருள் விரயம் செய்து கொண்டு நாளைக் கடத்துவதைவிட நல்ல கட்டிடத்தைப் பெற முயல்வதே உசிதமாகும். இது விஷயத்தில் புதிய நிர்வாக சபையார் கவனஞ் செலுத்துவார்களா?

# ஸ்ரீமதி மகாலெட்சுமி பிரிவு

சென்னை கூட்டுறவு இலாக்கா மாஜி டிப்டி ரிஜிஸ்திரார் திரு. வி. டி. நாயகம் அவர்களின் மருமகள் ஸ்ரீமதி மகாலெட்சுமி அம்மையார் காலஞ் சென்றதை அறிய மிகவும் வருந்துகிறோம். திரு. வி. டி. நாயகம் அவர்களின் குமாரர் திரு. வி. என். நாயகம் அவர்கள் ராக்பெல்லர் பவுண்டேஷன் சகாய நிதியின் பேரில் உயர்தரக் கல்வி பெறும் பொருட்டு தனது மனைவியுடன் ஆகஸ்ட்-மீ இறுதியில் அமெரிக்காவிற்குப் பிரயாணமானார். தம்பதிகள் இருவரும் சுகமாகவே கடல் யாத்திரையை முடித்ததாகவும், அவர்கள் மார்செலில் துறைமுகத்தைச் சேர்ந்ததாகவும் தெரிகிறது. ஆனால் செப்டம்பர்-மீ மத்தியில் அம்மையாருக்கு டைபாய்ட் சுரம் கண்டதாகவும், தேர்ச்சி பெற்ற வைத்திய நிபுணர்கள் சிகிச்சை செய்து வந்ததாகவும், அதன் பயனாக திருப்திகாமான நிலைமை ஏற்பட்டு வந்ததாகவும் தெரிகிறது. ஆனால் அக்டோர்பர்-மீ முதல் வாரத்தில் கிடைத்துள்ள திடுக்கிடத்தக்கதும் நெஞ்சுருக்கக்கூடியதுமான செய்தியிலிருந்து அம்மையாரைப் பீடித்தடைபாய்ட் சுரம் நிமோனியாவில் கொண்டு வந்து விட்டதாகவும் கடல் யாத்திரையால் ஏற்பட்ட பலஹீனமும், இடமாற்றத்தால் ஏற்பட்ட மனச் சோர்வும் சேர்ந்து அம்மையாரது பிரிவுக்கு எமனாக விளங்கியதாகவும் தெரிகிறது. உயர்தரக் கல்வியின் பொருட்டு தனது கணவன் மேல் நாடு செல்லுகையில் அவரைப் பின்பற்றிச் சென்ற அம்மையார் நடுவழியிலே, அறிமுகமற்ற நாட்டிலே, தனது பெற்றோரும் குழந்தைகளும் இல்லாத நேரத்திலே, தனது கணவனுக்கு ஆறுதல் கூறவும் எவரும் இல்லாத நிலையிலே, பிரிய நேர்ந்ததை நினைக்க நினைக்க நமது நெஞ்சம் பதறுகிறது. திரு. வி. என். நாயகம் அவர்களுக்கு ஏற்ற மனைவியாகவும், திரு. வி. டி. நாயகம் அவர்களின் நன்மதிப்பைப்பெற்ற மருமகளாகவும் விளங்கிய ஸ்ரீமதி மகாலெட்சுமி அம்மையாரின் பிரிவு நாயகம் குடும்பத்ினருக்கு மாத்திரம் ஏற்பட்ட மகத்தான நஷ்டமன்று. தமிழ் நாட்டிலிருந்து, கூட்டுறவாளரைச் சேர்ந்தவர்களில் அமெரிக்காவிற்குப் பிரயாணமான முதன்மையான தம்பதிகள் திரு. வி. என். நாயகமும் அவரது மனைவியுமேயாகும். இவ்விளம் தம்பதிகளில் அம்மையாரது பிரிவும், அதனால் திரு. வி. என். நாயகத்திற்கு நேர்ந்த சங்கடமும் பொதுவாக தமிழராலும், குறிப்பாக கூட்டுறவாளராலும், சிறப்பாக வாலிபர்களாலும் பெரும் நஷ்டமாகக் கருதப்படுவதுடன் மிகவும் விசனிக்கப்படுகிறது. திரு. வி. டி. நாயகம் அவர்களுக்கு நமது அனுதாபம் உரியதாகுக.



# கிருஷிகளும் கூட்டுறவு இயக்கமும்

## விவசாயிகள் துயரம்

### திரு. ராமதாஸ் கூறும் யோசனை

சர்வ தேசக்கூட்டுறவாளர் மகாநாட்டிற்குப் பிரயாணமாவதற்கு முன் திரு. ராமதாஸ் பந்துலு ஆகாயவதனி மூலம் பம்பாய் நகரில் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம் பின் வருமாறு :—

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் 25 வருடங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டது. 1929-ம் ஆண்டுவரை நன்றாக விருத்தி அடைந்து வந்ததுடன் சுமார் 30,000 பிரதம சங்கங்களும், மத்திய பாங்குகளும் ஏற்பட்டன. சங்கங்களுக்கும் மூலதனமாக உள்ளது 60 கோடி ரூபாயாகும்.

இந்தியா ஒரு விவசாய நாடு. இந்நாட்டின் விமோசனம் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியைப் பொருத்ததாக இருக்கிறது. இந்நாட்டில் கிருஷிகள் கடனாக வாங்கும் பணத்திற்கு அதிகமான வட்டியைக் கொடுக்கின்றனர். நிற்க, கிருஷிகளுக்குக் கடன் கொடுக்கும் லேவாதேவிக்காரர்கள் விதிக்கும் நியந்தனைகள் அவர்களை நிலைதாக்கவொட்டாமற் செய்கிறது. லேவாதேவிக்காரர்களது தலையால் கட்டப்படும் பெரும்பாலான கிருஷிகள் தங்களது விளைபொருள்களை குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறது. தங்களுடைய விளைபொருள்களை தாங்கள் விரும்பும் சமயத்தில் விற்று லாபமடையும் சுதந்திரத்தை இழக்கவும், நஷ்டமடையவும் நேரிடுகிறது. எனவே, நிலத்தைப் பயிரிடவும், அதற்கான வேலைகளைத் தடையின்றி செய்யவும் விளையும் பொருள்களை லாபகரமாக விற்கவும், வேண்டிய வசதிகளே இது சமயம் கிருஷிகளின் தேவை எனலாம்.

அறுவடை காலத்தில் கடன்காரர்கள் தொல்லை அதிகரிக்கிறது. சர்க்கார் வரி முழுமூமாக வசூல் செய்யப்படுகிறது. இதனால் கிருஷிகளுக்குப் பண நெருக்கடி ஏற்படுகிறது. அக்காலத்தில் பணம் கிடைத்தால் போதும் என்ற நிலைமை ஏற்படுகிறது. யாவரும் ஏககாலத்தில் விளைபொருளை விற்க ஆரம்பிக்கின்றனர். அதனால் விளைபொருளின் விலை குறைகிறது.

இது போன்ற கஷ்டத்தை சமாளிக்க வேண்டியது அவசியம். கிருஷிகளுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து உதவுவதில் கூட்டுறவு இயக்கம் ஓர் பிரதமமான ஸ்தானத்தை வகித்து வருகிறது. எனினும், கிருஷிகளின் தேவை முழுவதையும் பூர்த்தி செய்துவிட்டதாகச் சொல்லுவதற்கில்லை. கிருஷிகளுக்கென நிறுவப்பட்ட பாங்குகள் யாவும் அவை ஆரம்பிக்கப்பட்ட 25 வருடங்கள் வரையில் நன்றாக வேலை செய்து வந்துள்ளன வென்றே சொல்லலாம். 1929-ம் வருடம் முதல் ஏற்பட்ட பொருளாதார மந்தம் கூட்டுறவு இயக்கத்தில் ஓர் புதிய சகாப்தமெனலாம். இது முதல் இவற்றின் வேலை முறை திருப்திகரமாக நடைபெறுவதற்கில்லை. இன்றையதினம் கிருஷிகளுக்குக் கடன் கொடுப்பதென்பது குறைந்து விட்டதென்றே சொல்ல வேண்டும். 1929-ம் வருடம் முதல் பிரதமச் சங்கங்கள் பெரும்பாலும் தவணை கடந்த பாக்கிகளை வசூல் செய்வதிலேயே கவனஞ் செலுத்தி வருகின்றன.

தற்சமயம் லேவாதேவிக்காரர்களும், சாதாரண பாங்குகளும் கிருஷிகளுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்திவிட்டனர். பழம் பாக்கியைத் திருப்பிக் கொடுக்குமாறு நெருக்குகின்றனர். இதனால் கிருஷிகள் அடைந்துள்ள நிலை வெகு துர்பாக்கியமானதென்றே சொல்ல வேண்டும். அவர்கள் தங்களுக்குத் தேவையான பணத்தை எங்கும் பெற வழி இல்லை. விளையும் பொரு

ளில் இருந்து அவர்கள் எதுவும் பெருவதற்கில்லை. சிற்சில இடங்களில் விளையும் பொருள் சர்க்கார் வரியைச் செலுத்துவதற்கே போதியதாக இல்லை. இது காரணமாக இவர்கள் பிரதமச் சங்கங்களுக்குத் தவணைப்படி தங்கள் பாக்கியை செலுத்துவதற்கில்லை. அதன் பயனாக இவர்களுக்குப் பொருள் உதவி செய்யக்கூடிய சங்கங்களிலிருந்து இவர்கள் எத்தகைய உதவியையும் எதிர்காலத்தில் அடைய முடியாது போகிறது.

கிருஷிகளுக்குக் கடன்கொடுக்க பிரதமச் சங்கங்கள் மறுக்கின்றனவென்றால் மத்திய பாங்குகளிலும் மாகாண பாங்குகளிலும் குறைந்த வட்டிக்குக் கிடைத்த ஏராளமான பணம் முடங்கிக் கிடக்கின்றது. இம்மாதிரியான நிலைமையை விட்டுக்கொண்டிருப்பது உஜிதமல்ல.

இதுகாலை லேவாதேவியற்ற ஏனைய துறைகளில் கூட்டுறவு இயக்கத்தை விருத்தி செய்ய முயற்சி செய்யப்படுகிறது. குடிசைத் தொழில் விருத்தி சம்பந்தமாக கவனஞ் செலுத்தப்படுகிறது.

சாமான்கள் வாங்குவோர் சங்கம் கூட்டுறவுத் துறையில் மிகவும் விசேஷமானது. இந்தியாவில் இத்துறையில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆனால், அதன் பெருமை தற்சமயம் உணரப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் நோக்கம் அங்கத்தினர்களுக்குக் குறைந்த செலவில் அவர்களது தேவைகளைப் பெரும்படி செய்வதேயாகும். இதுபோன்ற சங்கமொன்று சென்னையில் சென்ற 25 வருடங்களாக நடந்து வருகிறது. பம்பாயிலும் இதுபோன்ற சங்கங்கள் சில இருக்கின்றன. மேல்நாட்டில் இத்துறையில் கூட்டுறவு இயக்கம் உச்சநிலையை அடைந்துள்ளது.

இங்கிலாந்தில் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் சாமான் வாங்கும் சங்கங்களில் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். லண்டனில் நடைபெறக் கூடிய சர்வ தேசக் கூட்டுறவாளர் மகாநாட்டிற்கு நான் பிரதிநிதியாக செல்லுகிறேன். அம்மகாநாடு சாமான் வாங்கும் சங்கங்கள் விஷயத்தில்தான் அதிக கவனஞ் செலுத்தும். இது குறித்து நடக்கும் விவாதத்தில் கலந்து கொள்வதுடன் இத்துறையில் பல உண்மைகளை அறிய என்து கவனத்தைச் செலுத்துவேன். இம்மகாநாட்டில் கலந்துகொள்ள தனது பிரதிநிதியை தானாகவே இந்தியா தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளது இதுவே முதல் முறையாகுமென்பதை நீங்கள் அறிய மகிழ்ச்சி அடைவீர்களென நினைக்கிறேன். கூட்டுறவு இயக்கத்தின் லட்சியம் ஒன்றேயாதலின் இவ்வியக்கத்தைப் பொறுத்தமட்டில் இந்தியாவுக்கும் ஏனைய மேல்நாடுகளுக்கும் மாறுபட்ட அபிப்ராயம் உண்டாகவும் அதனால் சிக்கலான பிரசினைகள் எழவும் மார்க்கமில்லை.

மேல் நாடுகளில் இதுகாலை கூட்டுறவு இயக்கம் ஓர் புதிய தோற்றத்துடன் விளங்குகிறது. அதாவது, கூட்டுறவு ஸ்தாபனங்களின் நிர்வாக விஷயத்தில் சர்க்கார் அதிக கவனஞ் செலுத்துகின்றனர். நாட்டின் செல்வ விருத்திக்கான வழிகளைக்கண்டு அவற்றினைக் கண் காணிக்கிற விஷயத்தில் அரசாங்கம் அதிக அக்கரை காட்டுகிறது. இந்தியாவிலும் சர்க்கார் செல்வ விருத்திக்கான திட்டங்களை வகுப்பதில் கவனஞ் செலுத்துகின்றனர். ஆனால் கூட்டுறவு இயக்கம் அவர்களது திட்டத்தில் ஓர் அம்சமாக இல்லை. சர்வ தேசக் கூட்டுறவாளர் சங்கம் தலையிடுமானால் மாகாண சர்க்காரும் மத்திய சர்க்காரும் கூட்டுறவு இயக்கத்தின் விசேஷத்தை உணருவார்களென நம்புகிறேன்.



# விற்பனைச் சங்கம்

கூட்டுறவு நிலையம் பிரசாரகர், திரு. நீலகுமார் எழுதுவதாவது :—

பொருளாதார நெருக்கடியும், விளைபொருள் விலை சவதமுமான, இந்தக் காலத்தில் கிருஷிகள் விவசாயத்தைக் கொண்டு ஜீவனம் புரிவதென்பது மிகக் கஷ்டமாகும். பெரும்பாலான கிருஷிகள் அநேகமாக ஐந்து எக்கர் நிலத்தையே பூஸ்திதியாகப்பெற்று உளர். எனவே, அவர்களது வருமானம் மிகக் குறைவானதாகவே இருக்கிறது. தற்போது நாம் கவனிக்கவேண்டியது எல்லாம் ஒரு விவசாயிக்கு ஓய்வு காலம் உளதா? அவ்வாறு இருக்குமாகில் அந்த ஓய்வு காலத்தில் அவர்கள் செய்யக்கூடிய தொழில் ஏதாவது உண்டா? அதன் மூலம் அவர்களது ஓய்வு காலத்தை வருமானத்திற்குரியதாகச் செய்யலாமா?' என்பதேயாகும். மத்திய பாங்குக் கமிட்டியார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கிருஷிகள் வருடம்தோறும் மூன்று முதல் நான்கு மாத விடுமுறை உடையவர்களாக இருக்கிறார்களென்றும். அக்காலத்தை அவர்கள் ஏதாவது கைத்தொழிலில் செலவழிப்பார்களாகில் அவர்களின் வருமானம் பெருக மார்க்கமுண்டென்றும் கூறியுள்ளனர். கிருஷிகளின் ஓய்வு காலத்தை லாபகரமானதாகச் செய்யக்கூடிய குடிசைத் தொழில்கள் பல உளதென்றாலும் நூற்றல், நெய்தல், பாய்முடைதல், கயிறு திரித்தல், நெல் குத்தல், மா அரைத்தல், பாத்திர வேலை செய்தல், பால். தயிர், நெய் உற்பத்தி செய்தல் ஆகிய வேலைகளைக் கைக்கொள்ளலாம்.

இதுகாலை இத்தொழில்களின் நிலை என்னவென்று பார்க்கின் இத்தொழில்களில் ஈடுபட்டிருப்போர் சாமான்களைச் செய்து கைஇருப்பில் வைத்துக்கொள்ளுகிறார்களில்லை. குறிப்பிட்ட சில சாமான்கள் தேவை என யாராவது கேட்கும்போது முன் பணம் பெற்றோ அல்லது பதனிடாத பொருளைப் பெற்றோ சாமான்களை உற்பத்திசெய்து தங்களை நாடி வந்தவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதற்குக் காரணம் பலஉள. அவற்றில் முதன்மையானது இத்தொழிலில் ஈடுபட்டிருப்போர் கையில் முதல் இல்லாமை எனலாம். கைத்தொழிலில் ஈடுபட்டிருப்போரின் முதலில்லாத கஷ்டத்தை நீக்கவும், கடன் சுமையிலிருந்து மீட்கவும் கிராமச் சங்கங்களும், நகரச் சங்கங்களும் குறைந்த வட்டிக்குப் பணம் கொடுத்து உதவிபுரியலாம். நிற்க, உற்பத்தி செய்யப்படும் சாமான்களை விற்பனை புரிகிற விஷய்த்தில் விற்பனைச் சங்கங்கள் மிக உபயோககரமானவையாகும். இச்சங்கங்கள் பொருள்களை பொருட் காட்சி மூலம் விளம்பரப்படுத்தி விற்பனை புரியலாம். இம்முறையில் லக்னோவில் நடைபெறும் ஒரு சங்கத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அச்சங்கம் மாகாணம் பூராவும் உள் நாட்டில் சாமான்களை உற்பத்தி செய்வோரிடம் சம்பந்தம் வைத்துக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் சாமான்களை விற்பனை புரிந்து கைத்தொழில் செய்வோருக்கு உதவி அளிக்கிறது. இச்சங்கம் இவ்வேலை செய்வதுடன் தொழிற்கல்வியை அளிப்பது சிலாக்கியமென மத்திய கூட்டுறவு பாங்கு கமிட்டியார் சிபார்சு செய்துள்ளனர்.

கிருஷிகளின் வருமானத்தைப் பெருக்கவும், அவர்களது ஓய்வு காலத்தை லாபகரமானதாகச் செய்யவும், புதிது புதிதான தொழில்களைப் புகுத்துவதும், தற்போதுள்ளவற்றை விருத்தி செய்வதும் சிறந்த மார்க்கமென்ற முடிவுக்கு மத்திய பாங்கு விசாரணைக் கமிட்டியார் வந்துள்ளனர். உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யத் தகுந்த ஸ்தாபனங்கள் இல்லாதிருந்தும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நன்றாக விலை போகக்கூடியதும் விருத்தியடைந்துள்ளதுமான சில தொழில்கள் இன்றும் நடந்து வருகின்றன. இங்ஙனமிருக்க, உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்ய சரியான ஸ்தாபனங்கள் இருக்குமாகில் அவையாவும் எவ்வளவு தூரம் விருத்தி அடையக்கூடுமென்பதை வற்புறுத்திக் கூற வேண்டியதில்லை. இத்துறையில் கூட்டுறவு இலாக்காவும், கைத்தொழில் இலாக்காவும் பல அரிய வேலைகளைச் செய்யலாம். இவற்றின் முயற்சியால் கிருஷிகளின் வருமானம் பெருகவும் அவர்களது வாழ்க்கை மேம்பாடடையவும் முடியும்.

148733

# மேம்படு வாழ்க்கை நடத்தும் சங்கங்கள்

பாஞ்சால கூட்டுறவு யூனியன் காரியதரிசி திரு. கான் முகமத்பாஷீர் அகமத்கான் எழுதுவதாவது :—

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இந்தியாவில் கிராமப் புனருத்தாரணம் நடைபெற்று வருகிறது. இவ்வேலையை முன்னிட்டு பற்பல சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கது பாஞ்சாலத்திலுள்ள மேம்பட்ட வாழ்க்கை நடத்தும் சங்கங்களாகும்.

மேம்பட்ட வாழ்க்கை நடத்தும் சங்கங்களின் முதன்மையான நோக்கம் அங்கத்தினர்களின் செல்வ நிலையைப் பெருக்குவதாகும். அதனை உத்தேசித்து அவை செய்யும் வேலையாவது :—

அங்கத்தினர்களிடையே இருந்து வரும் கெட்ட பழக்க வழக்கத்தை மாற்றுவது; அங்கத்தினர்களின் சுகாதாரம், ஒழுக்கம் முதலியவற்றை வளர்ப்பது; அங்கத்தினர்களிடம் வீண் செலவைக் குறைத்து சிக்கனப் பயிற்சியை அளிப்பது; அங்கத்தினரிடையே சுயமரியாதை உணர்ச்சியை உண்டு பண்ணுதல்; அங்கத்தினர்களது குழந்தைகளது கல்விப் பயிற்சிக்கும், தேகப்பயிற்சிக்கும் உதவுதல்; அங்கத்தினர்களிடையே தன் நம்பிக்கை, சுய உதவி ஆகியவற்றினைப் பெருக்குதல்.

மேற்கண்ட வேலைகளைச் செய்ய தேவையான நிதி பிரவேசக் கட்டணம், உதவிக் கட்டணம், அபராதம் விதித்தல் முதலியவற்றால் வசூலிக்கப்படுகிறது. இச்சங்கம் கடன் வாங்கவோ அல்லது டிபாசிட்டு பெறவோ அனுமதிக்கப்படவில்லை.

ஒருவர் மேம்பட்ட வாழ்க்கை நடத்தும் சங்கத்தில் அங்கத்தினராவதென்றால் அவர் ஓர் நிபந்தனையில் ஒப்பமிடவேண்டும். அதன் பிரகாரம் அவர் சங்க விதிப்படி நடப்பதாகவும், அவ்வாறு நடக்கத்தவறினால் ரூ. 100 அபராதம் செலுத்துவதாகவும் ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்வாறு விதிக்கப்படும் அபராதம் உடனே செலுத்தப்படவேண்டும். ஆனால், மகாஜன சபைக்கு அப்பீல் செய்து கொள்ளக்கூடிய உரிமை அங்கத்தினருக்கு உண்டு.

பாஞ்சாலத்தில் தற்போது இச்சங்கங்களின் எண்ணிக்கை 481. அவற்றின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 15,338. சராசரி ஒரு சங்கத்திற்கு 31 அங்கத்தினர் விகிதம் இருக்கின்றனர்.

முன்னம் குறிப்பிட்டவாறு இச்சங்கங்கள் யாவும் அர்த்தமற்ற சடங்குகளின் மூலம் நடைபெறும் அனாவசியச் செலவுகளைக் குறைத்து வருகின்றன. இச்சங்கங்கள் உள்ள இடங்களில் அங்கத்தினர்களின்பணம் ஆயிரக்கணக்காக மீதப்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஜோலண்டேர் என்ற இடத்தில் மேம்பட்ட வாழ்க்கை நடத்தும் 14 சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தினர்கள் ரூ. 14,000 கல்யாணச் செலவு செய்தார்களாம். ஆனால், அவர்கள் சாதாரணமாக வழக்கப்படி செய்வதென்றால் ரூ. 23,000 செலவு செய்வது வழக்கமாம். இம்மாதிரியான சங்கங்களின் மூலம் மாகாணம் முழுவது கட்டாய மேம்படு வாழ்க்கை முறை போதிக்கப்படுகிறதெனலாம். அதிலும் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி பொது ஜனங்களை சிக்கனமாக வாழ்க்கை நடத்துமாறு தூண்டுகிறது. இந்நிலையில் இச்சங்கங்களை விருத்தி செய்வது எளிதான காரியமே. வாட்சி நிறைந்த இக்காலத்தில் வளர்ச்சி பெறும் இச்சங்கங்கள் செழுமையான காலம் வரின் வீழ்ச்சியுறாதிருக்குமாறு கவனஞ் செலுத்துதல் அவசியம்.

இச்சங்கங்களைப்பற்றி 1933-ஆம் அறிக்கையில் கூட்டுறவு இலாக்கா ரிஜிஸ்திரார் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. அதாவது :— விசேஷ காலங்களில் செலவைக் குறைப்பதில் இச்சங்கங்கள் கவனஞ்செலுத்தி வருகின்றன. சென்ற இரண்டொரு வருஷங்களில் இச்சங்கங்களின் முயற்சியால் வீண் செலவுகள் குறைந்திருப்பது உண்மையே. ஆனால் அவ்வாறு குறைந்திருப்பது இச்சங்கங்களின் வேலையினாலா? அல்லது பொது ஜனங்களிடம் பணப்புழக்கம் இல்லாத போன்மையினாலா? என்பது விவாதத்திற்குரியதாகும். எனினும், இச்சங்கங்கள் செய்துள்ள பிரசாரம் நற்பயனை உண்டு பண்ணத்தக்கதேயாகும்.



# திருச்சி ஜில்லா மத்திய பாங்கு மகாஜன சபைக்கூட்டம்

## மத்திய பாங்கு யாருக்குச் சொந்தம் ?

## பிரதம சங்கத்தார்—தனித்த பங்காளர் போராட்டம்

### "சங்கத்தார் கோரிக்கையே நியாயமானது"

### கூட்டுறவு ரிஜிஸ்திரார் ஆசிர்வாதம்

### நியாயாபிமானிகள் ஆதரவு

### மகாஜன சபையார் தீர்ப்பு

பிரதம சங்கத்தாருக்கு ஜே! ஜே!! ஜே!!!

திருச்சி,
அக்டோபர், 14-வ.

திருச்சி ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கின் மகாஜன சபைக்கூட்டம் திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. ராவ் பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை எம்.ஏ. பி.எல். எம். எல். ஸி. தலைமை வகித்தார். கூட்டுறவு இலாக்கா டிப்டி ரிஜிஸ்திரார் திரு. வி. வரதராஜ முதலியார், சப் டிப்டி ரிஜிஸ்திரார் திரு. நித்தியானந்தம் எம். ஏ ஆகியோர் விஜயம் செய்திருந்தனர். நிற்க, அறிக்கையில் கண்ட பிரகாரம் பிற்பகல் ஒரு மணிக்கே தனித்த பங்காளர்களும், பிரதம சங்கங்களின் பிரதிநிதிகளும் ஏராளமாகக்கூடி இருந்தனர். இதுவரையில் நடந்த எந்தக் கூட்டத்திலும் இவ்வளவு பிரதிநிதிகள் கலந்து கொண்டதில்லை என்றே சொல்லலாம். இக்கூட்டத்தில் கலந்து கொண்டோரிடையே என்றுமில்லாத புதிய உணர்ச்சி குடிகொண்டிருந்ததெனலாம். கூட்டத்திலிருந்தோருக்கு ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட விண்ணப்பமொன்று விநியோகம் செய்யப்பட்டது. அதனை சகலரும் ஆவலுடன் வாசித்துக் கொண்டிருந்தனர். விநியோகிக்கப்பட்ட பிரசுரத்தைப்படித்து ஆனந்தமடைந்தோர் பலர். ஆத்திரமடைந்தோர் அநேகர் (இப்பிரசுரத்தை 23-ம் பக்கத்தில் காண்க.) இதற்கிடையே தலைவர் கூறும் வார்த்தைகளை சகலரும் அமைதியாகக் கேட்க ஆயத்தமாயினர். அச்சமயம் தரையில் ஓர் குண்டூசி விழுந்தாலும்கூட அதன் சப்தத்தை சகலரும் உணரக்கூடிய நிலையில் கூட்டத்தில் அமைதி காணப்பட்டது. இந்நிலையில் தலைவர் அவர்கள் என்றும் போல் கம்பீரமாக எழுந்து மகாஜன சபையோரைப் பார்த்து கூறியதாவது :—

கூட்டுறவு அபிமானிகளே! நண்பர்களே! இன்றையதினம் நாம் பல முக்கியமான பிரச்னைகளை பரிசீலனை செய்து முடிவுகட்டும் பொருட்டு கூடியுள்ளோம். நமக்குள்ள வேலையோ அதிகம்; ஆனால், நேரமோ மிகக்குறைவு. இந்த சொற்ப காலத்தில் நிகழ்ச்சிக் குறிப்பில் கண்ட காரியங்களை முடித்தாக வேண்டும். இது விஷயத்தில் உங்களுடைய பூர்ண ஒத்துழைப்பு இருந்தாலொழிய நானும் எதுவும் செய்து கொள்வதற்கில்லை. இக்கூட்டத்தில் பலர் பேச வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர்களது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டியது அவசியம். ஆனால், அவ்வாறு பேசுவோர்களுக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். அதாவது, 'பேச விரும்புவோர் எவரும் ஐந்து

நிமிஷத்தில் சுருக்கமாக பேசி முடித்துவிட வேண்டும் என்பதேயாகும். இதனை சகலரும் அங்கீகரித்தால்தான் பேசுவதில் விருப்பம் உடையோர் யாவருக்கும் கூட்டத்தில் கலந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதுடன் நிகழ்ச்சிக் குறிப்பில் கண்ட காரியங்கள் யாவும் நிறைவேற முடியும். மேலும், மற்றும் ஓர் முக்யமான விஷயத்தை முடிவு கட்டும் பொறுப்பை உங்களுக்கே விட்டுவிடுகிறேன். அதாவது, தீர்மானங்களை ஓட்டுக்கு விட்டால் போதுமானதா? போலுக்கு அனுமதி அளிக்க வேண்டுமா? (எழுத்து மூலம் அபிப்ராயத்தை அறியவேண்டுமென யாராவது விரும்புவார்களாகில் அதற்கு அனுமதி) என்பதாகும். என்னைப் பொறுத்தவரையில் ஓட்டுக்கு விட்டு கணக்கிடுவதே போதுமானதென்பேன். போலுக்கு அனுமதிக்க வேண்டியதில்லை (எழுத்து மூலம் அபிப்ராயம் அறியவேண்டியதில்லை) என்று அபிப்ராயப்படுகிறேன். எனினும் உங்கள் அபிப்ராயத்தை அறிந்து உங்கள் விருப்பம் போல் நடந்துகொள்ளுகிறேன்.

## எதிர்ப்பு

*திரு எல் என். கோபால்சாமி அய்யர் பி.ஏ. பி.எல்., தலைவரது அபிப்ராயத்தை எதிர்த்து பேசியதாவது :—*

போல் கேட்பதென்பது (எழுத்துமூலம் அபிப்ராயத்தை அறிவதென்பது) ஒரு அங்கத்தினரின் உரிமையாகும். அவ்வுரிமையைப் பறிமுதல் செய்ய எவருக்கும் உரிமை இல்லை. அவ்வுரிமையை ரத்து செய்யவோ அல்லது கட்டுப்படுத்தவோ தலைவருக்கோ அல்லது மகாஜன சபைக்கோ எவ்வித அதிகாரமும் இல்லை. போல் கேட்கும் சுதந்திரத்தை பயன்படுத்திக்கொள்ளாதவாறு ஓர் அங்கத்தினரைத் தடுப்பது பெரும் அநீதியாகும். எனவே, இது குறித்து மகாஜன சபையாரின் அபிப்ராயத்தைக் கேட்க முற்பட்டதை தவறு என நான் கண்டிப்பதுடன் பிரஸ்தாபத் தீர்மானத்தை ஆட்சேபிக்கிறேன்.

திரு. கெ. சின்னசாமி அய்யர் பேசும்போது திரு. எல். என். கோபால்சாமி அய்யரைத் தழுவிப் பேசினார்.

## ஆதரவு

*திரு. என். எஸ் கோவிந்தசாமி தலைவரது அபிப்ராயத்தை ஆதரித்துக் கூறியதாவது :—*

ஒரு தீர்மானத்தைப்பற்றிய அபிப்ராயத்தை அறிவதில் ஓட்டுக்கு விட்டால் போதுமானதா? போல் கேட்க அனுமதிக்கலாமா? என்பது குறித்து இதுசமயம் விவாதிக்கப்படுகிறது. தற்போது நமக்குள்ள சொற்ப நேரத்தில் நம்முன்னுள்ள வேலைகளை முடிக்க ஓட்டுக்கு விடுவது போதுமானதென்பதை சதாரணமாக சகலரும் ஏற்கவேண்டியதேயாகும். எனினும், இந்த அபிப்ராயத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டிருப்பது விசனிக்கத்தக்கதே. போல் கேட்கும் உரிமைஒவ்வொரு அங்கத்தினருக்கும் உரியதாகுமென்றும், அவ்வுரிமையை பறிமுதல் செய்யக்கூடாதென்றும் கூறப்படுகிறது. போல் கேட்கும் உரிமை ஒவ்வொரு அங்கத்தினருக்கும் இருக்கிறது என்பது உண்மையே. இதனை எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இவ்வுரிமை துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடும் என்பதை இதுசமயம் குறிப்பிடவிரும்புகிறேன். அங்கத்தினர்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள உரிமையை துஷ்பிரயோகஞ் செய்யாது தடுக்கவேண்டுமென்பதை சகலரும் ஒப்புக்கொண்டாகவேண்டும். ஒரு விஷயத்தை முடிவுகட்டுவதில் ஓட்டுக்கும் விடுதல், போலுக்கும் அனுமதித்தல் என்ற இருமுறைகளுக்கு இடமிருக்குமாகில் நேரக்கூடிய சங்கடத்தை கவனிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஓர் தீர்மானம் கொண்டுவரப்படுமாகில் அதனை ஆதரிப்போரும் உண்டு. எதிர்ப்போரும் உண்டு. அத்தீர்மானம் நிறைவேறிவிடின் கூட்டத்தில் கண்ணியமாக நடந்துகொள்ளக்கூடியவர்கள் தங்கள் தோல்வியை ஏற்று மேற்கொண்டு கூட்டத்தின் நடவடிக்கைக்குப் பங்கம் வராது மௌனமாக இருப்பார்கள். அவ்வாறின்றி சிலர் தாங்கள் தோல்வி அடைந்தமைக்காக கூட்ட நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போடவும், கூட்டத்தை நடவாது தடுக்கவும், கூட்டத்தில் குழப்பத்தையும், கலவரத்தையும் உண்டு பண்ணவும் முற்படக்கூடும். போலுக்கு அனுமதி அளிப்பது இத்தகையோருக்கு பெரும் உதவியாக இருக்கும். இப்பெரியார்கள் தாங்கள் நினைத்த காரியத்தில்



வெற்றி பெற்றால்* போல் கேட்காமல் நல்ல பிள்ளைகளாக விளங்குவார்கள்; தோல்வி அடைந்தால் போல் கேட்கும் உரிமையைப் பிரயோகஞ் செய்து தாங்கள் நினைத்த காரியத்தை சாதிக்க விரும்புவர். இதனால் வீண் காலதாமத மேற்படுமென்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு முன்னம் பல கூட்டங்களில் நடந்துள்ளதே நான் கூறுவதற்கு ஓர் சான்றாகும். எனவே, போல் எடுக்க அனுமதி தந்து அவ்வுரிமையை துஷ்பிரயோகம் செய்ய விடுவதைவிட ஏதாவது ஓர் முறையை, அதாவது ஓட்டுக்கு விடுதல் என்பதை கைக்கொள்வதே சிலாக்கியம். பாங்கினைப் பொறுத்த சகல காரியங்களையும் முடிவு கட்டும் பொறுப்பு மகாஜன சபைக்கே உண்டு. இங்ஙனமிருக்க இது விஷயத்தில் மகாஜன சபையாரின் அபிப்ராயத்தை அனுசரித்து நடப்பதில் யார்தான் ஆட்சேபிக்க முடியும். ஓட்டு எடுத்தால் போதுமென தீர்மானிக்குமாறு உங்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## மகாஜன சபையார் தீர்ப்பு

தலைவர் கொண்டு வந்த தீர்மானம், அதாவது, ஓட்டுக்கு விட்டால் போதுமென்ற விஷயம், பெரும்பாலானவர்களால் ஏற்கப்பட்டது. ஓட்டுக்களை கணக்கெடுக்க தலைவர் எழுந்தார். ஆனால் எங்கும் சகலரும் கைதூக்கி இருப்பதை அறிந்தார். தீர்மானத்தை யாவரும் ஆதரிப்பதால் கணக்கெடுக்க வேண்டிய அவசியமில்லை என சிலர் கூறவே அவ்வாறு கூறியோர் அபிப்ராயம் பதிவு செய்யப்பட்டது; ஓட்டுகள் கணக்கிடப்படவில்லை.

## ரிஜிஸ்திரார் கடிதம்

பின்னர் தலைவர் தனக்கு ரிஜிஸ்திராரிடமிருந்து கடிதமொன்று கிடைத்ததாகவும், அக்கடிதத்தை மகாஜன சபை முன் வாசிக்க தனக்கு ரிஜிஸ்திரார் அனுமதி அளித்திருப்பதாகவும், அதன் பிரகாரம் தான் நடந்து கொள்வதாகவும் கூறி ரிஜிஸ்திராரின் கடிதத்தை வாசித்தார். தலைவர் அவர்கள் வாசித்த கடிதத்தின் சாரத்தை சப் டிப்டி ரிஜிஸ்திரார் திரு. நித்தியானந்தம் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினார். ரிஜிஸ்திராரின் கடிதத்தில் கண்டுள்ள வார்த்தைகள் காரமாகவே இருந்தன. அவ்வார்த்தைகளை தமிழில் திரு. நித்தியானந்தம் அவர்கள் கூறியபோது ஒவ்வொரு வார்த்தையும் உயிரைப்பெற்று அம்பாக மாறி பிரதிநிதிகளின் காதைத்துளைக்கலாயிற்று. ரிஜிஸ்திராரவர்கள் தமது அபிப்ராயத்தை கடிதத்தின் மூலம் தெரிவித்ததைவிட நேரில் ஓர் சொற்பொழிவின் மூலம் விளக்கி இருப்பாராகில் பிரதி நிதிகளின் மனதைப் பன்மடங்கு அதிகமாகக் கவர்ந்திருப்பார். ஆனால் அவர் நேரில் விஜயம் செய்யாத குறையை திரு. நித்தியானந்தம் நிவர்த்தி செய்துவிட்டாரெனலாம். பாங்கு தலைவருக்கு ரிஜிஸ்திரார் கனம் டி. ஆஸ்டின் அவர்கள் எழுதிய கடிதத்தின் சாராம்சமாவது :—

நான் திருச்சிக்கு வந்திருந்தபோது தனித்த பங்காளர்கள் சிலரையும், பிரதம சங்கங்களின் பிரதிநிதிகளில் சிலரையும் கண்டு பேசினேன். தனித்த பங்காளர்கள் பாங்கின் அமைப்பில் தற்போதுள்ள முறையில் மாற்றம் ஏற்படக்கூடாதென்பதைத்தெரிவித்தனர். பிரதமசங்கங்களின் பிரதிநிதிகள் மாறுதல் ஏற்படவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திக் கூறினர். இதுசமயம் மத்திய பாங்கின் சரித்திரத்தை கவனிக்கவேண்டியது அவசியமாகும். இந்த பாங்கின் ஆரம்ப திசையில் தனித்த பங்காளர்களே நிறைந்திருந்தனர். மேலும், 1909-ஆம் தனித்த பங்காளர்கள் தாங்கள் கொண்டுள்ள பங்குத்தொகையின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு ஓட்டுரிமை பெற்றிருந்தனர். அவர்கள் மகாஜன சபைக் கூட்டத்திற்கு விஜயம் செய்யவேண்டுமென்ற அவசியமில்லை. அவர்கள் தங்கள் ஓட்டுகளை பதிவு செய்து தபால் மூலம் அனுப்பலாம். 1921-ஆம் பிரதம சங்கங்கள் பாங்கில் பங்குதாரர்களாகச்சேர அனுமதிக்கப்பட்டன. அதுசமயம் நிர்வாக சபையில் தனித்த பங்காளருக்கு இரண்டு ஸ்தானமென்றால், பிரதமச் சங்கங்களுக்கு ஒரு ஸ்தானம் விகிதம் அளிக்கப்பட்டது. தனித்த பங்காளர்களின் பிரதிநிதிகளையும், பிரதம சங்கத்தாரின் பிரதிநிதிகளையும் இருசாராரும் நிறைந்த மகாஜன சபைக்கூட்டத்தில் தேர்ந்தெடுப்பதென்ற முறை கைக்கொள்ளப்பட்டது. ஆனால் 1925-ஆம் முதல் நிர்வாக சபையில் தனித்த பங்காளருக்கு 5 ஸ்தானமென்

னால் பிரதம சங்கத்தாருக்கு 3 ஸ்தானம் விகிதம் வழங்கப்பட்டதுடன், தனித்த பங்காளர்கள் தனித்த பங்காளரின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது, பிரதமச் சங்கத்தார் பிரதமச் சங்கத்தாரின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது என்ற தனித்தேர்தல் முறை புகுத்தப்பட்டது. 1926-௵ நிர்வாக சபையில் தனித்த பங்காளருக்கு ஒரு ஸ்தானமென்றால், பிரதம சங்கத்தாருக்கு ஒரு ஸ்தான விகிதம் வழங்கப்பட்டது. ஆனால் இரு சாராரின் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுப்பதில் கூட்டுத் தேர்தல் முறை அனுஷ்டிக்கப்பட்டது. 1929-௵ நிர்வாக சபையில் தனித்த பங்காளருக்கும், பிரதம சங்கத்தாருக்கும் சமமான ஸ்தானமிருப்பினும் தனித்தேர்தல் முறை கைக்கொள்ளப்பட்டது. ஆனால் 1932-௵ பெருந்தோர் மாறுதல் ஏற்பட்டது. அதன்படி நிர்வாக சபை அமைப்பில் தனித்த பங்காளருக்கும், பிரதம சங்கத்தாருக்கும் சமமான ஸ்தானமிருப்பினும்; ஒரு நபருக்கு ஒரு ஓட்டுதான் உண்டு என்ற கொள்கை வற்புறுத்தப்பட்டது. மேலும் மகாஜன சபையில் ஒவ்வொரு அங்கத்தினரும் பிரசன்னமாயிருந்தாலொழிய ஓட்டுரிமையை பயன்படுத்திக்கொள்ள முடியாதென்பது கட்டாய விதியாகச் செய்யப்பட்டது. 1933-௵த்தில் நான்கு மகாஜன சபைக் கூட்டங்கள் நடைபெற்றும் புதிய நிர்வாக சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதற்குக் காரணம் தனித்த பங்காளருக்கும், பிரதம சங்கத்தாருக்கும் நிர்வாக சபை அமைப்பு விஷயத்தில் ஏற்பட்டுள்ள தகராறேயாகும். இத்தகராறு காரணமாக பாங்கின் வேலை நடவாது ஸ்தம்பிக்கவும், அதன் வளர்ச்சிக்கு ஹானி ஏற்படவும் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்நிலைமையை நீடிக்குமாறு விட்டுக்கொண்டிருப்பது உசிதமன்று. பிரதம சங்கத்தார் தங்களுக்கு நிர்வாக சபையில் மூன்றில் இரண்டு பங்கு ஸ்தானம் வேண்டுமென்கின்றனர். அவர்கள் நிர்வாகசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதில் கூட்டுத் தேர்தல் முறையை ஆதரிக்கின்றனர். அவர்களின் கோரிக்கை நியாயமானதே. அவர்கள் கேட்கும் உரிமை டவுன்சென்ட் கமிட்டியார் சிபார்சினை ஒட்டியதாகவும் இருக்கிறது. மேலும், கூட்டுத்தேர்தல் முறை இப்பாங்கினுக்குப் புதியதானதுமன்று. ஏற்கனவே இம்முறை அமுலில் இருந்து வந்திருக்கிறது. இடையிலே சமீபகாலத்தில்தான் கைவிடப் பட்டிருக்கிறது. கடந்த நான்கு மகாஜன சபைக்கூட்டத்திலும் இப்பிரசினை சம்பந்தமாக நடந்த விவாதத்தில் பெரும் பான்மையோர் பாங்கின் விதியில் திருத்தஞ் செய்ய ஆதரவளித்திருப்பதே பிரதம சங்கத்தாரின் பிரதிநிதிகள் வேண்டுகோள் நியாயமானதென்பதை மெய்ப்பிப்பதுடன் அவர்களது கோரிக்கை இயற்கைக்கு மாறானதன்று என்பதையும் புலப்படுத்துகிறது. மேலும், கூட்டுத்தேர்தல் முறை உண்மையான கூட்டுறவு உணர்ச்சியையும், தனித்த பங்காளருக்கும், பிரதம சங்கத்தாருக்கும் நேசப்பான்மையையும் உண்டுபண்ணுகிறது. தனித்த பங்காளருக்கு ஒரு ஸ்தானமென்றால், பிரதம சங்கத்தாருக்கு இரண்டு ஸ்தானமென்று ஏற்படுவதால் பிரதம சங்கங்கள் தங்கள் சங்கியைக்குத் தக்கவாறு பிரதிநிதித்துவம் பெறுகின்றன. தற்போதிருந்து வரும் தேவைக்கு மேல் அதிகமாகவுள்ள நிர்வாக சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைகிறது. அதனால் வீண்செலவு குறைய நேரிடுகிறது. எனவே, நான் பிரதம சங்கத்தாரின் கோரிக்கையை ஏற்பதுடன் அதன் பிரகாரம் பாங்கின் விதியைத் திருத்திக்கொள்ள வேண்டுமென தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவ்வாறு பாங்கு விதி திருத்தப்படுவதில் தடை ஏற்படுமானால் பாங்கின் நிர்வாக சபையைக் கலைத்து விடுவதென்றும், பாங்கை பரிபாலனஞ் செய்ய ஒரு டிப்டி ரிஜிஸ்திராரை நியமிப்பதென்றும் முடிவு செய்திருக்கிறேன். இக்கடிதத்தை 14—10—34-உ யன்று நடைபெறும் மகாஜன சபை முன்பாக படித்துக் காட்டவும்.

## திகைப்பு

ரிஜிஸ்திரார் அவர்களின் கடிதம் வாசிக்கப்பட்டதும் எங்கும் நிசப்பதமாக இருந்தது. பாங்கின் விதியை மாற்றுவதில் அக்கறை கொண்டோரையும், விதியை மாற்றக் கூடாதென்பதில் பிடிவாதமாக இருந்தோரையும் ரிஜிஸ்திராரின் கடிதம் திகைக்கச் செய்துவிட்டது. இத்தகைய கடிதத்தை இருசாராரும் எதிர்பார்க்கவில்லை. ரிஜிஸ்திரார் கடிதம் பிரதம சங்கத்தாரின் [illegible] உரிமையாக ஒரு சாராரால் கருதப்பட்டது.



ஆனால் மற்றொரு சாரார் ரிஜிஸ்திரார் கடிதத்தை ஓர் "அவசரச்சட்டமாகவே" கருதினர் எனலாம்.

## நிர்வாகசபை அமைப்பில் மாற்றம்

நிகழ்ச்சிக் குறிப்பில் கண்ட 2-வது விஷயத்தை முதலில் எடுத்துக் கொள்வதென நீண்ட விவாதத்தின்மேல் முடிவு செய்யப்பட்டது. அதன்பிரகாரம் பாங்கின் விதி நெ. 22 (ஏ) (பி) தற்போதுள்ளதாவது :—

"22. (ஏ) பாங்கின் நிர்வாகம் அடியில் கண்டவர்களடங்கிய ஒரு போர்டாரால் நடத்தப்படும்.

ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு லோகல் சூபர்வைசிங் யூனியன் மஹாசபையாராலும், அந்தந்த யூனியன் கவர்னிங் பாடி மெம்பர்களிலிருந்து ஒவ்வொரு யூனியனுக்கு ஒருவர் வீதம் தெரிந்தெடுக்கப்பட்டவர்களும், ஜில்லா பெடரேஷனின் பிரதிநிதி ஒருவரும், ஆடிட் யூனியன் பிரதிநிதி ஒருவரும், (ஜில்லா பெடரேஷன் பிரதிநிதி பெடரேஷன் மஹாசபை மெம்பர்களிலிருந்து மானேஜிங் போர்டாரால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.)

(பி) யூனியன்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவ்வளவோ அவ்வளவு பிரதிநிதிகள் தனிநபர் மெம்பர்களிலிருந்து தங்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

மானேஜிங் போர்டு மெம்பர்கள் மூன்று வருஷகாலத்திற்கு உத்தியோகம் வகிக்கவேண்டும். இந்த மூன்று வருஷங்களுக்குள் மானேஜிங் போர்டில் காலியேற்பட்டால் பாக்கி காலத்திற்கு தனிநபர் பிரதிநிதி ஸ்தானமாயிருந்தால் மீதியிருக்கப்பட்ட மானேஜிங் போர்டு மெம்பர்களாலும், யூனியன் பிரதிநிதி ஸ்தானமாயிருந்தால் சம்பந்தப்பட்ட யூனியன்களாலும் பூர்த்தி செய்யப்படவேண்டும். புது நிர்வாக போர்டு மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படும் வரையில் அதற்கு முன்னிருந்த நிர்வாக போர்டாரே பாங்கின் நிர்வாகத்தை நடத்தி வரவேண்டும். மானேஜிங் போர்டு மெம்பர் டை போர்டாருக்கு உசிதமெனத் தோன்றும் காரணமில்லாமல் தொடர்ச்சியாய் மூன்று மீட்டிங்குகளுக்கு ஆஜராகாவிடில் தனது ஸ்தானத்தைவிட்டு விலகினவராக பாவிக்கப்படுவார். ஆனால் போர்டாராலேயே மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படலாம்."

மேற்கண்டவிதி கீழ்க்கண்ட பிரகாரம் திருத்தப்படவேண்டும். திருத்தமாவது :—

"பாங்கின் நிர்வாகம் சங்கப் பிரதிநிதிகளில் 14 பேரும் தனிநபர் பிரதிநிதிகளில் 7 பேரும் ஆக 21 மெம்பர்களடங்கிய ஒரு போர்டாரால் நடத்தப்படும். சங்கப்பிரதிநிதிகளும், தனிநபர் பிரதிநிதிகளும், அதற்காகவே கூட்டப்பட்ட ஒருமகாஜனசபைகூட்டத்தில்தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சங்கங்களின் பிரதிநிதிகள் சங்கங்களின் டெலிகேட்டுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தனி நபர் பிரதிநிதிகள் தனி நபர் பங்கு தாரர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பாங்கின் நிர்வாக எல்லைக்குள் பதினான்கோ அல்லது அதற்கு மேல்பட்ட யூனியன்களோ இருந்தால், ஒரு யூனியனுக்கு அதில் அணைக்கப்பட்ட சங்கங்களிலிருந்து ஒரு டெலிகேட்டுக்கு மேல் இருக்கக்கூடாது. யூனியன்களின் சங்கியை பதினான்குக்கு குறைந்திருந்தால் ஒவ்வொரு யூனியனுக்கும் அதில் அணைக்கப்பட்டிருக்கும் சங்கங்களிலிருந்து ஒரு டெலிகேட்டாவது இருக்கவேண்டும். மானேஜிங் போர்டு மெம்பர்கள் மூன்று வருஷ காலத்திற்கு உத்தியோகம் வகிக்கவேண்டும். இந்த மூன்று வருஷங்களுக்குள் மானேஜிங் போர்டில் காலியேற்பட்டால் போர்டில் சங்கப்பிரதிநிதிகளுக்கும், தனிநபர் பிரதிநிதிகளுக்குமுள்ள விகிதம் எப்போதும் பாதிக்கப்படாமலிருக்கும் பக்ஷத்தில் பாக்கி காலத்திற்கு மீதியிருக்கப்பட்ட மானேஜிங் போர்டு மெம்பர்களால் அது பூர்த்தி செய்யப்படவேண்டும்.

புதிய நிர்வாக போர்டு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் அதிகாரத்தை ஒப்புக் கொள்ளும்வரை அதற்கு முன்னிருந்த மானேஜிங் போர்டாரே பாங்கின் நிர்வாகத்தை நடத்திவரவேண்டும். போர்டு மெம்பர் ஒருவர் தொடர்ச்சியாய் மூன்று மீட்டிங்குகளுக்கு ஆஜராகாவிடில் அவர் தன் ஸ்தானத்தை இழந்துவிடுவார். ஆனால் போர்டாரால் மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்படலாம்."

மேற்கண்ட திருத்தம் [illegible] திரு. டி. எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களால் பிரேரேபணை செய்யப்பட்டது. அது காலை அவர் பேசியதாவது :—

தோழர்களே!

நான் கொண்டுவந்துள்ள திருத்தப் பிரேரணையை ஆதரிக்குமாறு உங்கள் யாவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன். பிரஸ்தாபத்திருத்தம் நிறைவேறி அமுலுக்கு வருமாகில் பிரதம சங்கத்தாராகிய நாம் இதுவரையில் அடைக்கிராத விசேஷ உரிமையை பெறுகிறோம். இதன் மூலம் நாம் பலதுறையிலும் முன்னேற்றமடைய மார்க்கமிருக்கிறது. இவ்வுரிமையைப் பெற நாம் வெகு நாளாக முயர்ச்சித்து வருகிறோம். ஆனால் நமது சகோதரர்கள் யாவரும் கண் விழிப்படையாமையால் நமது முயற்சியில் வெற்றி பெறாதிருந்தோம். ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கு நமக்குச் சொந்தமானதென்பதை இன்று நீங்கள் உணர வேண்டும். இத்தீர்மானத்தின் நோக்கம் அவ்வுணர்ச்சியைக் காட்டுவதேயாகும். இத்தீர்மானத்தை நீங்கள் யாவரும் ஆதரிப்பீர்களென நான் நம்புகிறேன். எனவே, இதைவிட எதுவும் அதிகமாகக் கூற நான் விரும்பவில்லை.

## ஆதரவு

திரு. டி. எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை மண்ணச்சநல்லூர் திரு. என்.எஸ். கோவிந்தசாமி ஆதரித்துப் பேசியதாவது :—

சகோதரர்களே!

தோழர். டி. எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். பிரஸ்தாபத் தீர்மானம் விரும்பத்தக்கதாக இருப்பதுடன் மிகவும் நேர்மையானதுமாகும். இத்தீர்மானம் தனித்த பங்காளர்கள், பிரதம சங்கத்தார் ஆகிய இரு சாராருக்கும் நியாயம் வழங்குவதாகவும், ஏதேச்சாதிகாரத்தை ஒழிப்பதாகவும் இருக்கிறது. இத்தீர்மானத்தின் முற்பகுதி, நிர்வாக சபையில் தற்போது தனித்த பங்காளருக்கும், பிரதம சங்கத்தாருக்கும், சரிசமமான ஸ்தானமாக இருப்பதை, தனித்த பங்காளருக்கு ஒரு ஸ்தானமும், பிரதம சங்கத்தாருக்கு இரண்டு ஸ்தானமுமாகச் செய்யவேண்டுமென்பதாகும். இவ்வாறு செய்வதை சிலர் வெறுக்கவும் கூடும். அவ்வாறு வெறுப்போர் பிரஸ்தாபத் தீர்மானம் நிறைவேறின் பாங்கிற்கு ஆபத்து ஏற்படக்கூடுமென புரளி செய்யக்கூடும். 1925-ல் நிர்வாக சபையில் தனித்த பங்காளருக்கு 5 ஸ்தானமும், பிரதம சங்கத்தாருக்கு 3 ஸ்தானமும் என்று இருந்ததை இரு சாராருக்கும் சமமான ஸ்தானமிருக்கவேண்டுமென தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அத்தீர்மானம் நிறைவேறுமாகில் பாங்கி பாழாகும் என சிலர் புரளி செய்யாமலில்லை. எனினும் அக்காலத்தில் அத்தீர்மானம் நிறைவேறியது. அத்தீர்மானம் நிறைவேறி அமுலுக்கு வந்து வருடங்கள் 9 ஆகியும் இன்னும் பாங்கியும் இருந்துதான் வருகிறது, அக்காலத்தில் புரளி செய்தவர்களும் இன்னும் பாங்கியில் இருந்துதான் வருகின்றனர். இன்னும் பாங்கிற்கு எத்தகைய ஆபத்தும் வந்ததாகத் தெரியவில்லை. மேலும், பிரஸ்தாபத் தீர்மானம் புதியதானதென்றோ, ஆபத்தானதென்றோ சொல்லுவதற்கில்லை. இத்தீர்மானம் டவுன்செண்ட் கமிட்டியார் சிபார்சினை ஒட்டியதாக இருக்கிறது. அக்கமிட்டியில் பிரபல கூட்டுறவாளர்களான திரு. ராமதாஸ் பந்துலு, திரு. ஜி. கெ. தேவதார், திரு. ராமலிங்கம் செட்டியார் போன்றோர் அங்கத்தினர்களாக இருந்திருக்கின்றனர் என்றால் அவர்கள் செய்துள்ள சிபார்சுகள் எத்தகையதாக இருக்கக் கூடுமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். மேற்கண்ட டவுன்செண்ட் கமிட்டியாரின் சிபார்சுகளை அனுசரித்து, நாம் கொண்டு வந்துள்ள தீர்மானம் தற்சமயம் கடலூர் ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கில் அமுலில் இருந்து வருகிறது. நிர்வாக சபையில் பிரதம சங்கத்தாருக்கு மூன்றில் இரண்டு பங்கு ஸ்தானம் கொடுத்ததால் கடலூர் மத்திய பாங்கிற்கு இதுவரையில் எத்தகைய ஆபத்தும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கடலூர் பாங்கிற்கு வராத ஆபத்து நமது பாங்கிற்கு வரக்கூடுமென நாம் எதிர் பார்க்க வேண்டிய அவசியமுமில்லை.

நிர்வாகசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதில் கூட்டுத்தேர்தல் முறை விரும்பத்தக்கதென்பதை நான் அதிகம் வற்புறுத்திக்கூற விரும்பவில்லை. கூட்டுத்தேர்தல் முறையே சிறந்ததென்பது சகலரும் அறிந்த உண்மையாகும். கூட்டுத்தேர்தல் நல்லதா? தனித்



தேர்தல் நல்லதா? என்பது குறித்து இதுவரை நம்நாட்டில் நடந்துவரும் விவாதத்தில் கூட்டுத் தேர்தலைப்பற்றி ஆதரித்துப் பேசிவர்கள் கூறியதைவிட நான் அதிகம் எதுவும் கூறுவதற்கில்லை. கூட்டுத்தேர்தலே மேலானதென்பதற்கு ரிஜிஸ்திரார் அவர்களின் கடிதமே போதிய அத்தாட்சியாகும். எனவே, பிரஸ்தாப தீர்மானத்தை நான் ஆதரிப்பதுடன் ஆதரவளிக்குமாறு உங்கள் யாவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## திருத்தப் பிரேரணை

தனித்த பங்காளர்களின் பிரதிநிதிகளை தனித்த பங்காளர்கள் தேர்ந்தெடுக்கலாம் என்ற திருத்தம் திரு. ஆர். சீனுவாச அய்யர் பி.ஏ. பி.எல். அவர்களால் பிரேரணை செய்யப்பட்டு திரு. சிவராமகிருஷ்ண அய்யர் பி.ஏ. பி.எல். அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, திரு. நாராயணாசாரியார் பி.ஏ. பி.எல். திரு. எஸ். அண்ணாத்துரை அய்யர் ஆகியோரால் ஆதரிக்கப்பட்டது. திருத்தப் பிரேரணையைக் கொண்டு வந்த திரு. ஆர். சீனுவாச அய்யர் கூறியதாவது :—

நிர்வாக சபையில் தனித்த பங்காளருக்கு 7 ஸ்தானமும் பிரதம சங்கத்தாருக்கு 13 ஸ்தானமும் இருக்கலாமென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், தனித்த பங்காளர்களின் பிரதிநிதிகள் தனித்த பங்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதே எனது விருப்பம். இதனை அனுசரித்தே நான் திருத்தப்பிரேரணையை கொண்டு வந்துள்ளேன். இதனை ஏற்கும் பட்சத்தில் நமக்குள்ளே ஒரு சமரசம் ஏற்பட மார்க்கமுண்டு. பாங்கின் முன்னேற்றத்திற்கு சமாசமான முடிவு செய்வதே நல்லதாகும்.

## திருத்தத்தின்மீது திருத்தம்

நிர்வாக சபை அங்கத்தினர்கள் ஒன்பதுக்கு மேல் இருக்கக்கூடாதென்றும், அவர்களை சங்கப்பிரதிநிதிகளிலிருந்தே தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும் ஓர் திருத்தம் திரு. வி. பி. கணேச அய்யர் எம. ஏ. பி. எல். அவர்களால் பிரேரணை செய்யப்பட்டு திரு. எல். என். கோபால்சாமி அய்யர் பி. ஏ. பி. எல். அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

நிர்வாக சபையில் 13 பேர் சங்கத்தின் பிரதிநிதிகளாகவும் 8 பேர் தனி நபர் பிரதிநிதிகளாகவும் தனி நபர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதாகவும் ஓர் திருத்தம் திரு. சின்னசாமி அய்யரால் பிரேரணை செய்யப்பட்டு திரு. எம். ஏ. நடேச அய்யரால் ஆதரிக்கப்பட்டது.

## திரு. துரைசாமி உடையார் சூடு

திரு. டி. எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களின் பிரேரணையை ஆதரித்தும், திருத்தப் பிரேரணைகளை எதிர்த்தும் கீழக்கற்கண்டார் கோட்டை திரு. எம். வி. துரைசாமி உடையார் பின்வருமாறு பேசினார் :—

தலைவர் அவர்களே! தோழர்களே! தோழர் முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தையும் அதனை ஆதரித்துப் பேசியோர் கூறிய வார்த்தைகளையும் இது வரையில் நீங்கள் காது கொடுத்து கேட்டீர்கள். அவர்கள் கூறியதைவிட நான் புதியதாக எதுவும் கூறுவதற்கில்லை என இருந்தேன். ஆனால் திரு. பிள்ளை அவர்களின் தீர்மானத்திற்கு திருத்தத்தின் மீது திருத்தம் கொண்டுவரப்பட்டதானது என்னை பேசத்தூண்டியது. இவ்வாறு கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் யாவற்றினையும்விட திரு. ஆர். சீனுவாச அய்யர் அவர்களின் திருத்தம் உங்களுக்குத் திகைப்பை உண்டு பண்ணி இருக்குமென நினைக்கிறேன். அவரது திருத்தப் பிரேரணையைக் காண நான் உண்மையில் திகைப்படைந்தேன். திரு. ஆர். சீனுவாச அய்யரும் திரு. எல். என். கோபால்சாமி அய்யரும் பழுத்த தேசிய வாதிகள். தேசிய மேடைமீது நின்று அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவை பல முறை என் காதாரக் கேட்டிருக்கிறேன். அது காலை அவர்கள் கூட்டுத்தொகுதியால் விளையும் நன்மையைப்பற்றி சாங்கோபாங்கமாக விளக்கியுள்ளார்கள். அவரது சொற்பொழிவைக் கேட்ட எவரும் கூட்டுத்தொகுதியை ஆதரிக்காதிருக்க முடியாது. அங்ஙனமிருக்க, திரு. ஆர். சீனுவாச அய்யர் அவர்கள் இது சமயம் கூட்டுத்தொகுதிக்கு விரோதமாகப் பேசுவாராகில் யார்தான் ஆச்சரியமடையாது இருக்க முடியும். தேசிய மேடை

களில் கூட்டுத் தொகுதியும் பாங்கின் நிர்வாக சபை அமைப்பில் தனித்தொகுதியும் வேண்டும் என்பது ஒன்றுக்கொன்று முரண்பாடானதாக இருப்பதுடன் அவரது அந்தரங்க சுத்தியை சந்தேகிக்க வேண்டியதாகவும் இருக்கிறது. இவ்வாறு இச்சந்தேகத்திற்கு ஆதாரமில்லாமலுமில்லை. ஏற்கனவே நடைபெற்ற நான்கு மகா ஜன சபைக்கூட்டங்களில் நிர்வாக சபையில் எண்ணிக்கையை 21 ஆகக் குறைப்பதென்றும், தனித்த நபர்களுக்கும் பிரதமச் சங்கங்களுக்கும் முறையே 7 ஸ்தானமென்றும், 14 ஸ்தானமென்றும் தீர்மானம் கொண்டுவரப்பட்டதும், அது காலை கூட்டுத்தேர்தல் குறித்து பிரச்னை எழாதிருந்ததும் சகலரும் அறிந்ததே. அக்காலத்தில் அத்தீர்மானத்தை எதிர்ப்பதில் முன்னணியிலிருந்தவர் திரு. ஆர். சீனுவாச அய்யர் என்பதை நான் வற்புறுத்திக் கூறத்தேவையில்லை. அதே திரு. சீனுவாச அய்யர் அவர்கள் இன்றையதினம் நிர்வாக சபையின் எண்ணிக்கையை குறைப்பதையும், தனித்த பங்காளருக்கும், பிரதம சங்கத்தாருக்கும் வழங்கும் ஸ்தானத்தையும் ஏற்பினும் கூட்டுத்தேர்தல் முறையை எதிர்ப்பதிலிருந்து அவரது செய்கை நல்லெண்ணத்துடன் கூடியதென எவ்வாறு கொள்ளமுடியும். அவர் இன்றையதினம் சமாதானத்தை நாட முற்பட்டிருப்பது தான் கொண்ட கருத்து ஈடேறாதெனக்கண்டு வந்த முடிவேயன்றி உண்மையான சமரசத்தைக் கோரியதாகச் சொல்ல முடியாது. அவர் தாம் ஏதோ விட்டுக்கொடுப்பது போல் சமாதானப் பேச்சுக்கு வந்தாலும் கூட்டுத்தேர்தல் முறைக்கு அவர் போடும் முட்டுக்கட்டையிலிருந்து அவர் கூறுவதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென்று கூசாமல் கூறுவேன். இறுதியாக எனது தோழர்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். பெரிய மனிதர்கள் அபிப்ராயம் என்பதற்காகவோ, பட்டாதாரிகள் சொல்லுகிறார்கள் என்பதற்காகவோ, நாம் த[illegible]ய ஆட்டக்கூடாது. பசப்பு வார்த்தை[illegible]ட்டு நாம் ஏமாறக்கூடாது. நாமும் மனி[illegible] என்ற எண்ணமும், நமக்கு சமஉரிமை [illegible]ன்ற உணர்ச்சியும், நமக்கு ஏற்படவேண்டும். இவ்வெண்ணமும் உணர்ச்சியும் ஏற்பட்டாலொழிய நமக்கு விமோசனமில்லை. இதனை அடிப்படையாகக்கொண்டே பிரஸ்தாபத்தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இத்தீர்மானத்தை ஆதரிக்கவேண்டியது உங்கள் கடமையாகும்.

## திரு. வடகலைக்கோனர் ஆப்பு

இன்றைய தினம் பல திருத்தப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இது நமக்கு ஓர் ஆச்சரியமாகத்தோன்றவில்லை. தாங்கள் கொண்ட கருத்தை நிறைவேற்றுவதற்காகவும், பிரஸ்தாபத் தீர்மானத்தை தோற்கடிப்பதற்காகவும் சுயநலக்காரர்கள் கையாளும் தந்திரம் திருத்தப் பிரேரணைகளைக்கொண்டு வந்து கலாட்டா செய்வதேயாகும். இத்தந்திரம் முன்னம் பல முறை கையாளப்பட்டிருக்கிறது. அதன்மூலம் இத்தந்திரத்திலிருந்து தப்பும் உபாயத்தை நாம் கற்றுள்ளோம். திருத்தப் பிரேரணைகளின் யோக்கியதையைப்பற்றி நான் அதிகம் விரிக்க விரும்பவில்லை. பிரஸ்தாபத் தீர்மானம் முதல் முதலாக ஓட்டுக்கு விடப்படும் பட்சத்தில் திருத்தப்பிரேரணைகளின் சாயம் வெளுத்துவிடும். எனவே, இன்னும் பேசிக்கொண்டு போவதை விட தீர்மானத்தை ஓட்டுக்கு விடுவதே மேல் என்பேன்.

திரு. ராமசாமி தேவர், திரு. எம்.எம். கிருஷ்ணசாமி பிள்ளை பி. ஏ., பி. எல். ஆகியோர் திருத்தப்பிரேரணைகளை எதிர்த்துப்பேசினார்கள்.

## திரு முத்துக்குமாரசாமிபிள்ளை விண்ணப்பம்

நான் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து பேசிய நண்பர்களுக்கு எனது நன்றி உரியதாகுக. எனது தீர்மானத்திற்குப் பல திருத்தங்கள் பொறுப்பு வாய்ந்த கனவான்களால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்களது அபிப்ராயமும் சாமான்யமாகப் புறக்கணிக்கத்தக்கதல்ல. பாங்கின் வாழ்விலும், தாழ்விலும் நமக்கு எவ்வளவு பங்குண்டோ அவ்வளவு அவர்களுக்கும் உண்டு. எனவே, நான் கொண்டுவந்துள்ள தீர்மானத்தையும், எனது தீர்மானத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தப்பிரேரணைகளையும் பரிசீலனை செய்துகொள்ளுவதைக் கொண்டு, நன்றுவதைத் தள்ள வேண்டிய பொறுப்பு மகாஜன சபையாரிடமே உள்ளதைப் பொறுத்ததாகும். நீங்கள் உங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்ளவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறேன்.

## திருத்தப் பிரேரணைகள் எங்கே?

திரு. கெ. சின்னசாமி அய்யர் சபையார் உத்திரவுடன் தனது பிரேரணையை வாபீஸ் வாங்கிக் கொண்டார். திரு. வி. பி. கணேச அய்யர் பிரேரணை ஓட்டுக்கு விடப்பட்டு தோல்வி அடைந்தது. திரு. கணேச அய்யர் தீர்மானத்தின் கதியே திரு. ஆர். சீனுவாச அய்யர் தீர்மானத்திற்கும் ஏற்பட்டது.

## தலைவர் நிலைமை

மேற்கண்ட திருத்தப் பிரேரணைகள் யாவும் ஒழிந்ததும் திரு. டி. எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களின் பூர்வாங்க தீர்மானம் ஓட்டுக்கு விடப்படுமென சகலரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அங்ஙனமிருக்க தலைவர் எழுந்து கூறியதாவது:—

நான் எனது உண்மை நிலையை விளக்கிக் காட்ட விரும்புகிறேன். நிர்வாகசபை அங்கத்தினர்களின் எண்ணிக்கையை 21 ஆக குறைப்பது உசிதமே. நிர்வாக சபையில் பிரதம சங்கத்தாருக்கும் தனித்த பங்காளருக்கும் முறையே 14 ஸ்தானமென்றும், 7 ஸ்தானமென்றும் இருப்பது எனக்கு உடன்பாடுதான். ஆனால், நிர்வாக சபையின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் தனித்த பங்காளர்களின் பிரதி நிதிகளை தனித்த பங்காளர்களும், பிரதம சங்கத்தாரின் பிரதி நிதிகளை பிரதம சங்கத்தாரும் தனித்த முறையில் தேர்ந்தெடுப்பதென்ற திரு. ஆர். சீனுவாச அய்யர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணையை முழுமனதுடன் நான் ஆதரிக்கிறேன்.

## ஆச்சரியம்

தலைவரின் பேச்சு பெரும் திகைப்பையும் பரபரப்பையும் உண்டு பண்ணிற்று. இவ்வாறு தலைவர் பேசுவாரென எவரும் எதிர் பார்க்கவில்லை. தலைவரது பேச்சைப்பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அபிப்ராயம் கூறலாயினர்.



## பிரதம சங்கத்தார் வெற்றி

தலைவரது அபிப்ராயம் குறித்து சகலரும் பேசிக்கொண்டிருக்கும்போது திரு. டி. எஸ் முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களால் பிரேரணை செய்யப்பட்ட தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. தீர்மானத்திற்கு சாதகமாக 401 பேர்களும், பாதகமாக 66 பேர்களும் ஓட்டு செய்தனர். பாங்கு விதியின்படி நான்கில் மூன்று பங்கினர் ஓட்டு செய்தால் பாங்கு விதி திருத்தப்படலாம். அதன்படி 351 பேர் ஓட்டுச் செய்தால் போதுமானதாகும். 50 பேர் அதிகமாகவே ஓட்டுச் செய்திருந்தனர். தீர்மானம் பெரும் பாலோர் ஆதரவில் நிறைவேறியது. தீர்மானத்திற்கு சாதகமாக சுமார் 35 தனித்த பங்காளர்கள் ஓட்டுக் கொடுத்தது கவனிக்கத் தக்கது. இவர்களில் பிரபல கூட்டுறவாளரும், தனித்த பங்காளிகளுமான திரு. தேச பூஷண பிரசன்ன வெங்கடேஸ்வர ராவ், டாக்டர் பி. எம். கிருஷ்ணசாமி நாயுடு, திரு. எல்.என். கோபால்சாமி அய்யர் (பாங்கின் மாஜி காரியதரிசி) திரு. எல். என். பரமசிவம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். திரு. எல். என். பரமசிவம் பிள்ளை அவர்கள் பாங்கின் உபதலைவராகையாலும், பாங்கின் தலைவர் திருத்தப் பிரேரணைக்கு சாதகமாக இருந்தமையால், திரு. பிள்ளை எவ்வாறு நடந்து கொள்வார்களோ எனபலர் கவனஞ்செலுத்தினர். திரு. பிள்ளை தீர்மானத்திற்கு சாதகமாக ஓட்டுசெய்வதை அறிய யாவரும் மனமகிழ்ச்சி அடைந்தனர். திரு. பிள்ளையைப் பார்த்து "நீங்கள் கூடவா எனது தீர்மானத்திற்கு பாதகமாக ஓட்டுக்கொடுக்கிறீர்கள்" என திரு. சீனுவாச அய்யர் கேட்டதாகவும், அதற்கு திரு. ஜெயராம அய்யர் அவர்கள் "திரு. பிள்ளை பழைய பிள்ளை அல்ல" என்று கூறியதாகவும் சொல்லப்படுகிறது. கடைசியாக, தீர்மானம் நிறைவேறியதும் தனித்த பங்காளர்களில் பிரபலஸ்தர்களாக விளங்கியவர்கள் பலரும், விவாதத்தில் கலந்து கொண்டிருந்தவர்களில் சிலரும், மனச்சோர்வடைந்தனர். தலைவர் தீர்மானம் நிறைவேறியதைக் கூறியதும் டிப்டி ரிஜிஸ்திரார் அவர்கள் அதனை பதிவு செய்து விட்டதாகத் தெரிவித்தார். சிற்றுண்டிக்காகக் கூட்டம் கலைக்கப்பட்டது.

### சிற்றுண்டி

சிற்றுண்டிக்காக ஏராள பணச்செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், சிற்றுண்டிக்குச் சென்றோர் ஸ்ரீரங்கம், சிதம்பரம், எழும்பூர் போன்ற இடங்களில் உற்சவ காலத்தில் ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட்டு வாங்க எவ்வளவு சிரமப்படவேண்டுமோ அவ்வளவு சிரமப்படவேண்டியதாயிற்று. ரயில்வே ஸ்டேஷனில் சிரமப்பட்டாலாவது டிக்கட்டு கிடைக்கும். ஆனால் இங்கு சிரமப்பட்டும் சிற்றுண்டி பெறாதவர்கள் பலருண்டு. அத்தகையோர் காப்பி ஹோட்டல்களை நாடிச்சென்றனர்.

### நிர்வாகசபை அங்கத்தினர்கள் தேர்தல்

சரியாக 5 மணிக்கு சிற்றுண்டிக்குப் பின்னர் மீண்டும் மகாஜன சபைக்கூட்டம் கூடலாயிற்று. பாங்கின் புதிய நிர்வாகசபை அங்கத்தினர்கள் திரு. எம். எம். கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களால் பிரேரபிக்கப்பட்டு, திரு. எஸ். செங்கமலம் பிள்ளை அவர்களால் ஆதரிக்கப்பட்டு, திரு. டி. எஸ் முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களால் ஆமோதிக்கப்பட்டு எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேறியது. அதன் பிரகாரம் தனிப்பட்ட நபர்களின் பிரதிநிதிகளாக ராவ் பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, தேச பூஷண பிரசன்ன வெங்கடேச ராவ், டாக்டர் பி.எம். கிருஷ்ணசாமி நாயுடு, திரு. இ. வி. கோபால்சாமி அய்யர் (பாங்கின் மாஜி காரியதரிசி) திரு. டி. எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை, திரு. ஏ. ராமசாமி அய்யர், திரு. ஆர். சீனுவாச அய்யர் ஆகியோரும், பிரதம சங்கங்களின் பிரதிநிதிகளாக திரு. அண்ணாமலை பிள்ளை, திரு. ராமசாமி தேவர், திரு. ஆர். ராமசந்திர ராவ், திரு. எல். என். பரமசிவம் பிள்ளை, திரு. ரெத்தின சர்மா, திரு. எஸ். அண்ணாத்துரை அய்யர், திரு. வி. வி. பாலுசாமி நாயுடு, திரு. வடமலைக் கோனார், திரு. குப்பமுத்து பிள்ளை, திரு. திருமலைசாமி கவுண்டர், திரு. விருத்தாசலம் ரெட்டியார், திரு. சிவசிதம்பரம் முதலியார், திரு. மாணிக்கம் செட்டியார், திரு. ராம ரெத்தினம் அய்யர் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பாதுகாப்பில் மாற்றம்.

பாங்கின் விதி 43-வது பகுதி தற்போதுள்ளதாவது :—

"இந்த விதிகளை மாற்றவும், சேர்க்கவும், அல்லது திருத்தவும் வேண்டுமானால் இதற்காகவே கூடிய மகா சபையில் நான்கில் மூன்று பங்கு அங்கத்தினர்கள் தாங்கள் நேரிலாவது பிரதிநிதி மூலமாவது ஆஜராக இருந்து ஓட்டுகள் மூலம் மாற்றிக்கொண்டாலொழிய திருத்தம் செய்யக்கூடாது. அந்தத் திருத்தமும் ரிஜிஸ்திராரின் அனுமதியின்றி அமுலுக்கு வரத்தக்கதல்ல."

மேற்கண்ட விதியை பின்வருமாறு திருத்துமாறு திரு. எம். வி. துரைசாமி உடையார் அவர்களால் பிரேரணை செய்யப்பட்டு திரு. என். எஸ். கோவிந்தசாமியால் ஆமோதிக்கப்பட்டது. திருத்தமாவது :—

"இந்த விதிகளை மாற்றவும் சேர்க்கவும், அல்லது திருத்தவும் வேண்டுமானால் இதற்காகவே கூடிய மகா சபையில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் தாங்கள் நேரிலேயே இருந்து ஓட்டுகள் மூலம் மாற்றிக் கொண்டாலொழிய திருத்தம் செய்யக்கூடாது. அந்த மாறுதலும் ரிஜிஸ்திரார் அனுமதியின்றி அமுலுக்கு வரத்தக்கதல்ல."

### திரு. நித்தியானந்தம் விளக்கம்.

மேற்கண்ட தீர்மானத்தை சப் டிப்டி ரிஜிஸ்திரார் விளக்கிக்கூறியதாவது :—

ஒரு பாங்கின் விதி மாற்றப்படுவதென்றால், நான்கில் மூன்று பங்கு பேர் ஆதரவு இருக்க வேண்டுமென்பதின் நோக்கம் மிகுதியான ஆதரவின்பேரில் மாறுதல் ஏற்படவேண்டும் என்பதே. அதற்கு பதிலாக பெரும்பான்மையோர் ஆதரவு இருந்தால் மாற்றலாம் என பாங்கு விதியைத் திருத்துதலும் உசிதமல்ல. யாராவது வாய் வீச்சு வீரர் ஒருவர் வீரமாகப் பேசினால் அவரது வார்த்தையை நம்பி சிலர் ஓட்டுக் கொடுக்கக்கூடும். அப்பொழுது இரண்டொருவர் ஓட்டு பலத்தால் தீர்மானத்



## ஓர் எச்சரிக்கை

ராவ்சாகிப் எம். எஸ். சேஷாசல அய்யர்

பொருளாதார நெருக்கடி காரணமாக சங்கங்கள் அங்கத்தினர்களிடமிருந்து பாக்கியை வசூல் செய்வது கஷ்டமாகவே இருக்கிறது. அதனால் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள நேரிடுகிறது. ஈடு வைக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை புரிகிற காலத்தில் அவற்றினை வாங்க ஒருவரும் முன் வராவிடில் சங்கங்களே வாங்க நேரிடுகிறது. இம்மாதிரி வாங்குவதனால் பணத்திற்கு வட்டி நஷ்டம் ஏற்படுவதுடன் சர்க்கார் வரியும் செலுத்த நேரிடுகிறது. எனவே, இது போன்று ஈடுவைக்கப்பட்ட சொத்தை சங்கமே வாங்குவது உசிதமா? உசித மல்லவா? என்பது குறித்து பின்னர் விவரிப்போம். ஆனால், இதுசமயம் இம்மாதிரி வாங்கும் சொத்துக்களை கணக்கில் காணும்முறை குறித்து விரிக்கவிரும்புகிறேன். சங்கத்தால் வாங்கப்படும் சொத்து பெரும்பாலும் முதலுக்கும் வட்டிக்கும் ஈடு செய்யப்படுகிறது. அநேக சங்கங்கள் வாங்கிய சொத்துகளை விற்பனை செய்யாதிருப்பதும், அவ்வாறு விற்பனை செய்யப்படுமாகில் கிடைக்கூடிய தொகை சங்கம் கொடுத்த பணத்திற்கே குறைவாக இருப்பதும், சகலரும் அறிந்த உண்மையாகும். கிராமச் சங்கங்கள் யூனியன்களின் மேற்பார்வையிலோ அல்லது பெடரேஷனது கண் காணிப்பிலோ இருக்க வேண்டுமென ஓர் முறை இருந்து வருகிறது. இவை தாங்கள் செய்ய வேண்டிய ஒவ்வொரு காரியத்திற்கும் பாங்கு அல்லது பெடரேஷன் ஆகியவற்றின் அனுமதியைப் பெறவேண்டி இருக்கிறது. எனினும், ஒரு சங்கத்தின் பஞ்சாயத்தார்கள் சுயநலக்காரர்களாக இருப்பின் தங்களுக்கு வேண்டிய ஒரு அங்கத்தினரது ஈடு வைக்கப்பட்ட சொத்தை அவரிடமிருந்து வரவேண்டிய பாக்கிக்காக வாங்கி அவரது கடனைத் தீர்த்து விடுவது சாத்தியமாக இருக்கிறது. ஆனால், அச்சொத்தை விற்பதின் மூலம் சங்கத்திற்குச் சேரவேண்டிய தொகையின் ஒரு பகுதி கிடைப்பதுகூட அரிதாக இருக்கிறது. எனவே, கிராமச் சங்கங்கள் அங்கத்தினர்களின் பாக்கியை உத்தேசித்து அவர்களது சொத்தை வாங்குவதானால் அதற்கு மத்திய பாங்கின் அனுமதியையோ, அல்லது டிப்டி ரிஜிஸ்திராரின் உத்திரவையோ பெற்ற பின்னர் தான் செய்யலாம் என்ற முறையைப் புகுத்த வேண்டும். அதுவே, அறியாமை நிறைந்த மகாஜன சபையாரை சூழ்ச்சியைக்கையாளக்கூடிய பஞ்சாயத்தாரிடமிருந்து தப்புவிக்கத் தக்க மார்க்கமாகும்.

(22-ம் பக்கத் தொடர்ச்சி.)

திற்கு ஆதரவு பாதிக்குமேல் இருந்து விட்டால் பாங்கின் விதியை மாற்றுவது என்பது நியாயமாகுமா? பெரும் பான்மையோர் விருப்பத்திற்கு மாறாக செய்யப்படும் காரியம் பாங்கின் நலத்திற்குப் பங்கம் விளைவிக்கும். ஆனால் தற்போதுள்ளதைவிட மூன்றில் இரண்டு பங்கினர் ஓட்டு செய்தால் பாங்கு விதியை மாற்றலாமென திருத்தஞ்செய்வது நலமெனலாம். இது நடுத்தரமான முறையாகும்.

### தீர்மானம் நிறைவேறியது.

திரு. நித்தியானந்தம் அவர்கள் விளக்கிக் கூறியதும், தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. எதிர்ப்பின்றி ஏகமனதாக தீர்மானம் நிறைவேறியது.

நிற்க, மற்றும் பல தீர்மானங்கள் எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அவற்றில் முக்கியமான இரண்டு பின்வருமாறு :—

(1) மத்திய பாங்கிற்கு சொந்தமான தென்னூரிலுள்ள நிலத்தை திருச்சி ஸ்ரீரங்கம் எலக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷனுக்கு விற்று விடலாமென்ற தீர்மானம் திரு. எஸ். அண்ணாத்துரை அய்யரால் பிரேரணை செய்யப்பட்டு திரு. வேம்பு அய்யரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

(2) 22—4—34 முதல் 12—8—34 வரை சிப்பந்திகளின் சம்பளப் பிடித்தம் சம்பந்தமான தீர்மானம் ரத்து செய்யப்படவேண்டுமென்றும், 1934—35 பட்ஜட் சாங்ஷன் செய்யப்படவேண்டுமென்றும் திரு. எம் எம். கிருஷ்ணசாமி பிள்ளையால் பிரேரணை செய்யப்பட்டு திரு. வி. வி. பாலுசாமி நாயுடுவால் ஆமோதிக்கப்பட்ட தீர்மானம் நிறைவேறியது.

இறுதியாக தலைவருக்கு நன்றி கூற கூட்டம் கலைந்தது.

# * An Appeal to the Individual Share-holders of the Trichinopoly District Co-operative Central Bank.

GENTLEMEN,

You know that an amendment proposing the reconstitution of the Board of Management of the Bank on a more democratic and co-operative basis has been tabled by some of the individual share holders and societies' delegates. It is not only the duty but the right of every well-wisher of the Bank to consider whether the amendment is calculated to enhance the stability, utility and reputation of the Bank. I am sure you have thought over the desirability or otherwise of this contemplated change. With the hope that you will eliminate all personal and sectarian considerations and view the question from the objective standpoint of the welfare of the Bank alone, I set out the arguments which justify, nay necessitate this change.

It is only a further step in the natural evolution of the Bank. Originally, the Bank consisted of individual share-holders only. After a time the societies were admitted as share-holders. The societies were at first given one-third of the seats in the Board, and then equal number of seats. It is but natural that they now claim a predominant voice in the Board of Management of the Bank.

The change proposed is in accordance with the basic principle of co-operation. The fundamental distinction between a Co-operative Society and a Joint Stock Organisation is that the former is an organisation of persons with common economic needs managed by *themselves* for their benefits, whereas the latter is an institution managed by *Capitalists* primarily for their benefit. The change proposed is therefore necessary to justify the claims of the Bank to be called a Co-operative Bank.

An expert committee (Townsend committee) composed of eminent co-operators like Mr. V. Ramadas Pantulu, President of the Provincial Bank, Mr. Devadhar, President of the Servants of India Society, Rao Bahadur T. A. Ramalingam Chettyar, and the late lamented K. T. Paul had recommended the democratisation of the administrative organ of the Central Bank after a mature study of the relevant data.

Most of the Central Banks have accepted this recommendation and reconstituted the Board in accordance with this principle. The fear entertained and expressed by many of the individual share holders that the change contemplated will adversely affect the Bank, is groundless as is evident from the fact that similar change has not prejudicially affected other Central Banks.

Some of the individual share holders oppose the change on the ground that they have always acted in the best interests of the societies and that there is no reason why they should not be trusted to do so in future. This argument does not correctly understand the point of view of the societies. The demand of the societies is not based upon the conviction that the individual share holders have acted in a way detrimental to the interests of the societies. This demand for larger representation is not in any way inconsistent with the admission of the claim of the individual share holders that they have done meritorious services in



the past. The demand is only an expression of the fact that the societies have reached the stage of adolescence, and it is an admission of the fact that the individual share holders have succeeded in their mission of training the society delegates to manage this institution. They naturally desire to shake off the tutelage of the individual share holders though benevolent, and claim a greater share in the affairs of the Bank. The adage "Good Government is no substitute for self-government" aptly answers this objection. It is a maxim based on a profound understanding of human psychology and applies as much to other spheres of human activities as to political.

Some of the individuals argue that since individual share holders and societies have contributed towards the share capital of the Bank in about equal proportions, they should constitute the Board in equal proportion. This argument is opposed to the basic principle of co-operation. The essential difference between a co-operative organisation and a Joint stock organisation is well brought out by the statement that the former is a union of persons whereas the latter is a union of capital. It is only on the basis of this principle that the system of 'One man one vote' obtains. In a Joint-Stock association a share holder exercises as many votes as he has shares, whereas in a co-perative organisation a share-holder exercises only one vote irrespective of the number of shares he holds. It is therefore clear that this argument is quite untenable. It only shows that we are not free from the influence of what I might call the ideas of the Joint Stockism.

What is the Board, and what for has it been constituted? The Board has been constituted only because it has been felt that the General Body cannot meet as often as necessary and that there should be a smaller Body which can meet often and transact business. From this it follows that the Board should be a mirror of the General Body if it is to be truly representative in character. In other words, the societies and the individual share-holders should *have representation in the Board in proportion to their strength*. The voting in the past four General Body meetings has shown that the societies constitute more than two-thirds of the General Body. Hence, it is but right and proper that the societies have not less than two-thirds of the seats in the Board.

A co-operative organisation is a democratic organisation. Democractic instituitions can function only if minority acquiesces in the rule of the majority. It can oppose, criticise, and fight the policy of the majority, but should allow the majority to carry on, till it converts itself into a majority. It is only on the basis of this doctrine that democracy can function. Hence, the implications of democracy require that the minority party in the Bank should allow the majority to function by conceding their demands.

Gentlemen, please consider for a moment calmly and dispassionately whether we are justified in thwarting the will of the majority by taking advantage of the bylaw which requires a three-fourths majority for carrying out an amendment. I do not question the legality of your action but the morality of it. Does not your attitude constitute a negation of the spiritual foundation of democracy? What is the true purpose and justification of constitutional safe guards such as the referandum, insistence on three fourth majority for amendment of the constitutions etc? They are intended to ensure that the proposals regarding the fundamental of constitutions really represent the will of the majority. The fact that the demands

of the societies have been supported by a vast majority in the last four general body meetings shows beyond a shadow of doubt that they really represent the will of the majority. Hence, to thwart the will of the majority by resort to this safe guard will be quite improper and will tantamount to an abuse of its real purpose.

It is really strange that people who cry hoarse over safe-guards in the White Paper should take advantange of an undemocratic feature of the constitution and negative the will of the majority. How hollow our pretentions to democracy are?

If you really believe in democracy you should accept the verdict of the majority.

Regarding Joint election, I need not say much. The consensus of opinion is that Joint election always conduces to the establishment of harmonious relationship.

So far I have deliberately abstained from touching upon the communal aspect of the whole controversy. If I did so it is because of my conviction that communalism cannot be killed by communalism, but only by large heartedness. However irrational and detestable communalism may be, I have no hestitation in saying that only the Gandhian attitude of large heartedness can cure the canker of communalism. Therefore, I request you to accept whole-heartedly the proposals even if you think that they are inspired by commual motives.

With faith in the benevolence of human nature, and your countrymen, and confidence in yourselves, march on, victory is yours and future will be as glorious as the past if not better.

Trichinopoly,
14—10—1934.

**N. S. GOVINDASWAMY,**
*Delegate, The Mannachanallore Co-operative Society, and Editor “Co-operative Commonwealth,” Trichy.*

*** The above appeal to the individual share-holders was published at the General Body meeting of the Trichinopoly District Co-operative central Bank held on the 14th October 1934 at the Muncipal Public Hall under the presidentship of Rao Bahadur T. M. Narayanaswamy Pillai M.A., B.L., M.L.C.**

148723



148723

மாகக் கூறினர். பகுத்தறிவுள்ள எவரும் தலைவரது அபிப்பிராயத்தை ஏற்காதிருக்க முடியாது. இங்ஙனமிருக்க போல் கேட்பது ஒரு அங்கத்தினரின் பிறப்புரிமை என்றும், அவ்வுரிமையைப் பறிமுதல் செய்ய எவருக்கும் உரிமை இல்லை என்றும், அவ்வுரிமையை ரத்து செய்யவோ அல்லது கட்டுப்படுத்தவோ தலைவருக்கோ அல்லது மகாஜன சபையாருக்கோ எவ்வித அதிகாரமும் இல்லை என்றும், போல் கேட்கும் சுதந்திரத்தை பயன் படுத்திக்கொள்ளாதவாறு ஒரு அங்கத்தினரைத் தடுப்பது பெரும் அநீதியாகுமென்றும், ஒரு சர்வகலாசாலை சட்ட கலாசாலைப்பட்டம் பெற்ற வழக்கறிஞர் விவாதித்ததானது நமக்கு உண்மையில் விந்தையாகவே இருந்தது. தலைவரது அபிப்ராயம் தீர்மான ரூபமாக ஓட்டுக்கு விடப்படவே, ஓட்டுகள் கணக்கிட வேண்டியதில்லாத நிலையில் ஏராளமான பிரதிநிதிகள் தீர்மானத்திற்கு சாதகமாக இருந்ததானது, மகாஜன சபையாரின் ஆதரவை தலைவர் எவ்வளவுதூரம் பெற்றுள்ளார் என்பதைக் காட்டுகிறது. இத்தகைய ஒரு தலைவரோ அல்லது மகாஜன சபையாரோ கூறும் யோசனை ஏற்கத் தகுந்ததல்லவென ஒரு பொறுப்பு வாய்ந்த அங்கத்தினர் கூறுவதுடன் நில்லாது கச்சை கட்டிக்கொண்டு மல் யுத்தம் புரிய முன் வருவாராகில் அவரது செய்கைக்கு நாம் உண்மையில் விசனிக்கிறோம். நிற்க, ஓட்டுக்கு விட்டால் போதுமானதென்ற தீர்மானத்தை ஆதரித்து திரு. என். எஸ். கோவிந்தசாமி அவர்கள் பேசியபோது குறிப்பிட்டதாவது :—

“போல் கேட்கும் உரிமை ஒவ்வொரு அங்கத்தினருக்கும் உரியதாகுமென்றும், அவ்வுரிமையைப் பறிமுதல் செய்யக்கூடாதென்றும் கூறப்படுகிறது. போல் கேட்கும் உரிமை ஒவ்வொரு அங்கத்தினருக்கும் இருக்கிறது என்பது உண்மையே. இதனை எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இவ்வுரிமை துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடும் என்பதை இது சமயம் குறிப்பிட விரும்புகிறேன். அங்கத்தினர்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள உரிமையை துஷ்பிரயோகஞ் செய்யாது நடக்க வேண்டுமென்பதை சகலரும் ஒப்புக்கொண்டாக வேண்டும்.”

மேற்கண்டவாறு உரிமை துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டதென்பதற்கு திரு. சூரிய நாராயண அய்யர் போல் கேட்டதே ஓர் உதாரணமாகும். ஒரு தீர்மானத்திற்கு 401 அங்கத்தினர்கள் சாதகமாகவும், 66 பேர் பாதகமாகவும் இருந்திருக்க, தீர்மானம் நிறைவேற 351 பேர் இருந்தால் போதியதாக இருந்தும், 51 பேர் அதிகமாக இருக்க, திரு. சூரிய நாராயண அய்யர் போல் வேண்டுமென (எழுத்துமூலம் தெளிவான அபிப்ராயம் அறியவேண்டுமென) கேட்பாராகில் அவர் தனக்குள்ள உரிமையை துஷ்பிரயோகஞ் செய்தார் எனக்கூறவேண்டியதைத் தவிர வேறு என்னென்பது? சாதாரணமாக மாணவர் கல்விக்கழகத்தில் தீர்மானமொன்று கொண்டு வரப்படின், அத்தீர்மானம் பாங்கின் மகாஜன சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைப் போன்று பெருமித ஆதரவைப் பெற்றிருப்பின், அங்குள்ள பள்ளிச்சிறுவர்களுங்கூட போல் வேண்டுமென எழுந்து கூற துணிந்து நிற்க மாட்டார்கள். அவ்வாறு பள்ளிச்சிறுவர்களுக்குங்கூட ஏற்படாத துணிவு திரு. சூரியநாராயண அய்யருக்கு ஏற்பட்டதென்றால் அதுகுறித்து யார்தான் ஆச்சரியமடையாதிருக்க முடியும். திரு. அய்யர் போல் கேட்டதையும், அதனால் எழுந்த ஆட்சேபனையையும் அறிந்துங்கூட, தீர்மானம் நிறைவேறிய மறு நிமிஷமே டிப்டி ரிஜிஸ்திரார் அவர்கள் பாங்கு விதியை தீர்மானத்தில் கண்ட திருத்தத்தை அனுசரித்து பதிவு செய்ததுடன், புதிய விதியின் பிரகாரம் புதிய நிர்வாக சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதி அளித்திருக்கிறார் என்றால், போல் கேட்டவரது போக்கு சிறு பிள்ளைத்தனமானதென ஊர்ஜிதப்பட்டதென்றே கூறலாம். ஆனால், தலைவர் மாத்திரம் முன் எச்சரிக்கையாகவும், புத்திசாலித்தனமாகவும், கூட்ட ஆரம்பத்திலேயே ஓட்டுக்கு விட்டால் போதுமானதென்பதாக மகாஜன சபையாரின் ஒத்துழைப்பின் பேரில் முடிவு கட்டாது இருந்திருப்பாராகில் திரு. சூரியநாராயண அய்யரின் சிறு பிள்ளைத்தனம் கூட்டத்தில் எவ்வளவுதூரம் குழப்பத்தையும், கலவரத்தையும் உண்டுபண்ணி இருக்கக்கூடும் என்பதை சிந்தித்துப்பார்க்குமாறு நமது வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

N34 1.10

# ஐக்கிய அரசு

(CO-OPERATIVE COMMONWEALTH)

STANDS FOR


BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 அக்டோபர் திருச்சி

## பிரதம சங்கத்தார் கண்விழிப்பு

அக்டோபர்-மீ 14-வ திருச்சி ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கின் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதோர் நன் னாளாகும். இந்நாளே கூட்டுறவு இயக்கம் வெற்றி அடைந்த தினமாகும். இன்றுதான் பிரதம சங்கத்தார் கண் விழிப்படைந்தனரென்றும் சொல்லலாம். "கூட்டுறவின் தத்துவத்தை நம் நாட்டினர் இன்னும் பூர்ணமாக உணரவில்லை; நம்மவரிடம் உண்மையான கூட்டுறவு உணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. கூட்டு முறையின் வாடை நம்மில் பலரை விட்டு இன்னும் மாறவில்லை" என திரு. ஜி. கே தேவதார் அவர்கள் கோவை ஜில்லா பாங்கு கட்டிடத் திறப்புவிழாவன்று கூறியதற்கு திருச்சி ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கு ஓர் உதாரணமாக விளங்கியது. கூட்டுவாடையே வீசி மங்கிக்கிடந்த திருச்சி ஜில்லா மத்திய பாங்கு அக்டோபர்-மீ 14-வ தான் உண்மையான கூட்டுறவு பாங்காக தோற்றமடைந்து, ஒளிபெற்று, கூட்டுறவு இயக்கத்தை கூட்டாக்கி வந்தவர்களின் சிறைக்கூட்டத்திலிருந்து தப்பி கூட்டுறவாளர் கைக்கு மாறியதென்று துணிந்து கூறலாம். எனவே, இச்சுபதினத்தை பிரதம சங்கத்தார் ஓர் திருநாளாகக் கொண்டாட வேண்டும்.

14-வ யன்று நடைபெற்ற மத்திய பாங்கின் மகாஜன சபைக்கூட்டத்தைப் போன்று இது வரையில் பாங்கின் சரித்திரத்தில் அழகான கூட்டம், அமைதியான கூட்டம், மெச்சத்தக்க கூட்டம், எதுவும் நடந்திருக்க முடியாதென நிச்சயமாகக் கூறுவோம். இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து, ராவ் பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் திறமையாக நடத்தியதைப் போன்று எவரும் இதுகாரும் நடத்தி இருக்க முடியாதென்போம். மகாஜன சபைக் கூட்டங்கள் பலவற்றினை திரு. பிள்ளை அவர்கள் தலைமை வகித்து நடத்தி இருப்பினும், இக்கூட்டத்தை அவர் திருப்திகரமாக நடத்தியதைப்போல் எக்கூட்டத்தையும் நடத்தி இருக்கமுடியாதென்றும் சொல்லுவோம். இக்கூட்டமானது தலைமை வகித்த தலைவருக்கும், கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கும், உண்மையில் பெருமை அளிப்பதாக உள்ளதென தாராளமாகக் கூறுவோம். கூட்ட ஆரம்பத்திலேயே தலைவர் நிகழ்ச்சிக் குறிப்பில் கண்டுள்ள வேலைகள் யாவற்றையும் முடிப்பதென்றால் போதிய காலமில்லை என்றும், எனவே, பேசுவோர் யாவரும் சுருக்கமாகப் பேசவேண்டுமென்



பதிவு எண்: எம். 3126.



# குரு மருந்துகள்

எப்போதும் தங்க மெடல்களே பரிசு பெற்று வருகிறது.

## குழந்தை மருந்துகள் மிக விசேஷமானது.

குருமருந்துகள் உபயோகமாகாத வீடுகள் கிடையாது

(1) குரு கோரோஜனை மாத்திரை—மலத்தைக் கழித்து வியாதியை போக்கும்
(2) குரு கஸ்தூரி காரமாத்திரை
(3) குரு தைலம்—மகா சஞ்சீவியாக விளங்குகிறது.
(4) குரு பால் பவுடர்—மாட்டுப்பாலை தாய்ப்பாலுக்குச் சமானமாக்குகிறது
(5) குரு பாலர் டாணிக்—ரத்தவிர்த்திக்கு சஞ்சீவி
(6) கக்குவானுக்கு குரு **K.** சொட்டு மருந்து—கைகண்டது
(7) குரு ஜீமா கழிம்பு—சகல கரப்பான்களுக்கும்
(8) சகலரண கழிம்பு—சகலவிதப் புண்பொடிகளுக்கு
(9) வயிற்றுக் கடுப்பு மருந்து
(10) தேரை நோய்—எலும்புருக்கி நோய்க்கு.
(11) குழந்தைகள் வயிற்றுக் கட்டிக்கு
(12) கெற்ப ஊரல் என்கிற கிரந்தி ரோகத்துக்கு

☞ குழந்தைகளுக்கு இன்னும் மிக அருமையான மருந்துகள் இருக்கிறது.

தங்க மெடல் பரிசுகள்—உயர்ந்த நற்சாட்சியங்கள்
சதா பெற்று வருகிறது.

டாக்டர் ஏ. மதுரம், திருச்சி

Printed and Published by Dr. A. Mathuram at the Guru Medical Hall Press, Trichinopoly.